




# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -323

# மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அரசு தடைவிதித்தது ஏன்?

நெற்றிபொறியன்



# தமிழ் அரசியல் தலைமைகளும் ஈழக்கோரிக்கையும் நடப்பது என்ன?

# மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அரசு தடைவிதித்தது ஏன்?

மாவீரர் தினத்திற்கு ஏன் அரசாங்கம் தடைவிதித்தது என்று நாம் ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் இந்த நாட்டில் ஒரு பயங்காரவாதிகளுடனே போர் இடம்பெற்றதாகவும் இலங்கை அரசு சித்தரித்திருக்கின்றது. அப்படியாயின் ஒரு கேள்வியும் எழுப்பப்படுகின்றது. என்னவெனில் பயங்கரவாத நாடுகளுடன் அல்லது பயங்கரவாதிகளுடன் ஏனையவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி கிட்டத்தட்ட 14கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றது. இதிலே 7 உள்ளூர் பேச்சுவார்த்தைகளும், சர்வதேச ரீதியாக 7 பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றிருக்கின்றன. இதில் முக்கியமாக தாய்லாந்து, டோக்கியோ பேச்சுவார்த்தைகள் அமையப்பெற்றிருக்கின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையிலே கடந்தகாலங்களிலே ஒரு மரபுவழி போராட்டங்களாக அவர்கள் கடல் வான் தரை என தோற்றப்பாடாக சர்வதேச அளவிலே அரசியல் ரீதியாகவும் ஆயுத போராட்ட இராணுவ வழியாகவும் இன்று இந்தளவு தூரம் பிரகாசித்திருப்பதற்கு அவர்களது அந்த ஒழுக்க விதிமுறைகள் தான் காரணமாக அமைந்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரையிலே அதுவும் தலைவர் பிரபாகரனை பொறுத்தவரையிலே ஒழுக்க விதிமுறைகளை அந்த இயக்கத்திலே அவர் கொண்டிருந்தார். இவ்வாறான ஒழுக்க விதிமுறைகளை கொண்டிருந்ததன் அடிப்படையில் பார்க்கும் பொழுது 58 பயங்கரவாத நாடுகள் உலகத்திலே இருக்கின்றன. இதிலே இலங்கையை பொறுத்தவரையில் தமிழீழவிடுதலைப்புலிகளையும் அந்த பட்டியலிலே அவர்கள் இட்டிருக்கிறார்கள். ஆனால் 58பயங்கரவாதநாடுகளிலும்தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரையிலே அவர்கள் ஒரு தனித்துவமானவர்கள். அதாவதுஒருநாட்டில்தங்களுடையதமிழினம் அடக்கப்பட்டு ஒரு வன்முறைக்குள் கொண்டு செல்லப்படுகின்ற பொழுது அதனை எதிர்த்து தமிழ் தரப்பிலிருந்து போராடியவர்கள் தான் தமிழீழ விடுதலைப்புலிகள். அவர்களுடைய மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க கூடாது என்று தற்பொழுது கோட்டபாய அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. இதனுடைய அடுத்தகட்டம் என்னவென்றால் மீண்டுமொரு ஆயுத போராட்டத்தை இந்த நாட்டில் உருவாக்குவதற்கு அல்லது வன்முறைகளில் இருந்து மீண்டும் தமிழினத்தை சுரண்டி பார்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இந்த மாவீரர் தினத்தினுடைய இலங்கையின் தடை உத்தரவை பார்க்ககூடியதாக இருக்கின்றது.

ஏனென்றால் சர்வதேச புலம்பெயர்ந்த நாடுகளிலே தமிழீழ விடுதலைப்புலிகளுடைய அதிவேக வளர்ச்சி அவர்களை உண்மையிலே தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல அல்லது பயங்கரவாத தடைச்சட்டம் நாட்டிலே நீக்கப்படுமாக இருந்தால் 24 மணித்தியாலயங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களுடைய அரசியல் தலைமைச் செயலகங்களை தமிழர் தாயகம் எங்கும் நிறுவி அந்த கட்டமைப்பு பாரியதொரு வளர்ச்சியை காணுகின்ற ஒரு கட்டமைப்பாக மாற்றம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஏனென்றால் சர்வதேச புலம்பெயர்ந்தவர்கள் ரீதியாக கிட்டத்தட்ட 480க்கும் மேற்பட்ட அமைப்புக்கள் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டவை. அதாவது இந்த 480 அமைப்புக்களும் பயங்கரவாத பட்டியலிடப்பட்டு தடை செய்யப்பட்டிருக்கிறது. கடந்த மகிந்த ராஜபக்சவினுடைய அரசாங்கத்தில் தான் இவ் தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது என்பதனை சுட்டிக்காட்டுகின்றோம். இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வடக்குகிழக்கை பொறுத்தவரையிலே தமிழர் தாயகம் என்று கூறப்படுகின்றது. கிட்டத்தட்ட 50 ஆயிரம் போராளிகள் இந்த ஈழப்போருக்காக தமது இன்னுயிரை பழியாக்கியிருக்கிறார்கள். அதுபோன்று கிட்டத்தட்ட 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு இருக்கும் பொழுது யுத்த வெற்றிகள் என்னும் பொழுது 30 வருட போராட்ட வரலாற்றிலே இலங்கை அரசானது ஒரு யுத்தத்தையேனும் அவர்கள் வெல்லவில்லை. அதாவது குறிப்பாக முல்லைத்தீவு, பூநகரி, ஆணையிறவு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல்கள், மன்னாரில் நடைபெற்ற தாக்குதல்கள், மட்டக்களப்பில் நடைபெற்ற தாக்குதல்கள் என இவ்வாறான பல்வேறு தாக்குதல்கள் எல்லாவற்றிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய வெற்றிகளை பெற்றிருக்கிறார்கள் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை. இது வரலாறாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் உண்மையில் சரிபிழைக்கு அப்பால் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ கட்டளைத்தளபதி என்று கூறப்படுகின்ற கருணாஅம்மான் இதற்கு சான்று பொருளாகவும் இருக்கிறார். ஆகவே தமிழீழ விடுதலைப்புலிகளின் வளர்ச்சியை ஒத்துக்கொள்ளாத சர்வதேச நாடுகளின் அழுத்தமும் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்குரிய ஒரு தடையாக அமைந்துள்ளது.

ஆகவே இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை இந்தியா அமெரிக்கா சீனா இந்த மூன்று நாடுகளுடைய ஒத்துழைப்புடன் அவர்கள் தமது அரசியலை அல்லது அவர்களுடைய ஆக்கிரமிப்பில் இருந்து கொண்டு தான் இந்த அரசாங்கம் தங்களுடைய அரசியலை செய்து கொண்டிருக்கிறது. இந்தியாவை பகைப்பதா? அல்லது அமெரிக்காவை பகைப்பதா?, சீனாவை பகைப்பதா? எதையுமே பகைத்துக்கொண்டு இலங்கையிலே தங்களுடைய அரசியலை செய்ய முடியாது என்பதை தற்பொழுதும் அவர்கள் உணர்ந்து தான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே இன்று நேற்று அல்ல மாறி மாறி வந்த அரசாங்கம் ஒவ்வொன்றும் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை சின்னாபின்னமாக்க வேண்டும் அந்த எச்சங்கள் கூட இறுதியில் இருக்ககூடாது என அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பையும் பிளவுபடுத்தி அதிலே 22 ஆசனங்களாக இருந்தவர்களை தற்பொழுது 10 ஆசனங்கள் வரை கொண்டுசென்றிருக்கிறது. அதற்கு தமிழ் தரப்பையே அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது தான் உண்மையில் மிகவும் கவலைக்குரிய விடயம். இதனை புரிந்து கொள்ளாத தமிழ் தரப்பும் அரசாங்கத்துடன் கைகோர்த்து அற்ப சொற்ப சலுகைகளுக்காக அவர்கள் சென்றிருப்பதும் மனவேதனையாகவுள்ளது. அடுத்து வரும் தலைமுறைகள் இந்த போராட்டம் தொடர்பான நடவடிக்கைகளை அவர்கள் உணர மாட்டார்கள். உணரக்கூடாது என்பதையே அரசாங்கம் நினைக்கிறது. அது அவ்வாறல்ல இனி ஒரு போராட்டம் இந்த நாட்டில் உருவாக்கப்படுமாக இருந்தால் அதுவொரு தொழினுட்பம் ரீதியாக இவர்களுடைய அடக்கு முறைகள் எதிர்வருகின்ற தமிழ் தலைமுறைக்கும் இவர்கள் வழங்குகின்ற பொழுது அந்த தமிழ் தலைமைகளும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக போர்க் கொடி தூக்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அன்று சிவகுமாரன் என்ற மாணவன் இந்த போராட்டத்திலே தன்னை பலியாக்கிக்கொண்டான். இதற்கான காரணம் கல்வியிலும் அடக்குமுறையை செய்கின்றார்கள் என்றவொரு காரணத்திற்காகத்தான்.



ஆகவே இந்த கோட்டபாய ராஜபக்ச அரசு ஏன் பயப்படுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளுடைய ஒவ்வொரு நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதில் அவர்கள் மும்முரமாக செயற்படுகின்றார்கள். ஆனால் கடந்த காலத்தில் மைத்திரிபால சிறிசேன அவர்கள் இந்த மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதியளித்தார். ஆனால் சிங்கள தரப்பில் ஒருசிலர் அதனை அனுஷ்டிக்கலாம் என்று கூறுகின்றார்கள். ஆனாலும் இந்த 2020ஆம் ஆண்டுமாவீரர் தினத்தைபொறுத்தவரையில் உலகளாவிய ரீதியில் இலங்கையை தவிர ஏனைய நாடுகளிலும் வெகு சிறப்பாக அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் கூட இவர்கள் இவ்வாறு செய்யும் பொழுது ஒவ்வொரு வீடுகளிலும் தமிழர் தாயகம் இருக்கின்ற பிரதேசத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் இதயபூர்வமாக அவர்கள் மாவீரர்களுக்கான அஞ்சலியை செலுத்தியிருக்கிறார்கள் என்பதிலே அடுத்த கட்ட தமிழர் மக்களின் உணர்வுகளை அவர்கள்தாண்டிபார்க்கின்றசெயற்பாடாகவே அதுஇருக்கின்றது. மன்னாரில், வவுனியாவில் யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில் இருக்கின்ற ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தன. இந்த பாதுகாப்பு ஒருபுறம், மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு இராணுவத்தினர் அவர்களுக்காக அஞ்சலி செலுத்தினார்களோ என்ற அளவுக்கு இராணுவத்தினரும் பொலிசாரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலைமை தொடருமாக இருந்தால் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட அந்த தமிழினம் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கப்போவதில்லை என்பதை தான் நாங்கள் இந்த இடத்தில் கூற முன்வருகின்றோம். ஆகவே தமிழர் தாயகம் மீண்டும் ஒரு எழுச்சியை உருவாக்குவதற்கு இவர்கள் நிகழ்ச்சிநிரல்களை செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதே இன்றைய வரலாற்று உண்மையாக இருக்கின்றது.

ஆகவே உண்மையில் இந்த போராட்டங்களுக்குரிய தியாகங்கள் மதிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமை போராட்டத்திற்கான ஒரு விடிவு கொடுக்கப்பட வேண்டும். அரசியல் ரீதியான தீர்வை தான் நாம் தற்பொழுது கேட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆகவே அந்த அரசியல் ரீதியிலான தீர்விலாவது அரசாங்கம் தன்னை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழினத்தை அடக்கிஆளுகின்ற ஒரு கலாச்சாரத்தை அவர்கள் அடியோடு ஒழித்துவிட வேண்டும். அவர்களுக்கான நினைவுதூபிகளை அதாவது இந்த போராட்டமானது யாரோடு இடம்பெற்றது என்றவொரு விடயத்தை நாங்கள் பார்க்க வேண்டும். ஆகவே இந்த போராட்டமானது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தான் இடம்பெற்றது. வேறு யாருடனும் இல்லை.இந்த தமிழ் தரப்பை அங்கீகரித்து அவர்களுக்கான ஒரு அங்கீகாரத்தை கொடுத்து வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை கையளிப்பதிலே அரசாங்கம் பின்னெடுத்து வருகின்றது. அவ்வாறு தமிழ் மக்களுக்கான அங்கீகாரத்தை கொடுக்கும் பொழுது இந்த பேச்சவார்த்தை படங்களோ ஒவ்வொன்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் என்பதை சர்வதேச ரீதியாக கோடிட்டு காட்டுகின்றது. ஆகவே இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை ஒரு போராட்டத்தின் மூலம் தமிழினத்தை அடக்கிவிட முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டுகளை பொறுத்தவரையிலே அதுவொரு தமிழ் மக்களின் விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்டத்தின் அரசியல் வளர்ச்சிக்கு அது பாரிய தொரு பங்களிப்பை கொடுத்ததாக சர்வதேச நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கின்ற ஒரு செயல் வடிவமாக அது மாறியிருக்கிறது. ஆகவே ஜனநாயகத்திற்கு விரோதமானவர்கள் அல்ல என்பதையும் தமிழீழ விடுதலைப்புலிகள் நிரூபித்து காட்டியிருக்கிறார்கள். அதற்கு சான்றாக சர்வதேச நாடுகளில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளும் உதாரணமாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி இறந்தவர்களுக்கான அஞ்சலியை செலுத்துவது என்பது தமிழர்களை பொறுத்தவரையில் வீட்டுக்கு வீடு ஒரு மாவீரர் என்று கூறலாம். அந்த வகையில் ஒரு சில வீடுகளில் மூன்று நான்கு மாவீரர்களும் இருக்கின்றார்கள். ஆகவே ஏதோவொரு வகையில் அவர்களும் போராளிகள் என்ற வகையில் அந்த வீட்டார் மாவீரர் நாள் வரும் பொழுது அவர்களை நினைவு கூறுவது என்பது சாதாரணமான விடயம் தான்.

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூடாது என்ற வகையில் அதனை முட்டுக்கட்டை போட்டு இந்த அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் இந்த அரசாங்கம் நீண்டதொரு அரசியல் பயணத்திலே தங்களுக்கு தாங்களே குழி வெட்டிக்கொள்கின்றார்கள் என்பதையே காட்டுகின்றது. நாங்கள் ஒரு ஊடகவியலாளர்களாக வீடுகளில் பார்க்கும் பொழுது ஒவ்வொரு வீட்டுக்கு அருகாமையிலும் புலனாய்வு துறையில் நிர்வாகத்திற்குள் குதிக்கப்பட்டு பெரும்பாலும் மக்கள் கூடி விளக்கேற்றும் பகுதிகளில் எல்லாம் தமது அட்டகாச முகத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

முன்னைய காலத்தில் விட்டிருந்தார்கள் ஆனால் தற்பொழுது அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. யார் அந்த கட்டளையை பிறப்பித்தார்கள் என்றால் நாட்டினுடைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தான். ஆகவே தமிழ் மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டு இந்த நாட்டை வளப்படுத்த முடியும், கட்டியெழுப்ப முடியும் என்ற கோட்டபாய ராஜபக்சவினுடைய கனவு என்பது அது நீண்ட தூர கனவாக இருக்க முடியாது என்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்கின்றோம்.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் அரசின் நடவடிக்கைகள்

யுத்தத்திற்குப் பின்னர் நாட்டின் நிலைமையானது முன்பிருந்ததைவிட பூகோள அரசியலுக்குள் சிக்குண்டு போயுள்ளது. இதன் காரணமாக சர்வதேச நாடுகள் இலங்கை மீது கொண்டிருந்த நம்பிக்கை சற்று தளர்வடைந்துள்ளது என்றே கூறலாம். ஆனாலும் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமது ஆட்சிக்காலத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்களே தவிர. தமிழ் மக்களுடைய நீண்டகால போராட்டத்திற்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தருவதாக ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் அமையவில்லை.

வடக்கு கிழக்கு என்பது தமிழர் தாயகம். எனினும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ அரசாங்கம் இதுவரையிலும் வழிமுறைகளை ஏற்படுத்தவில்லை. மாறாகத் தமிழ்க் கட்சிகளை பிளவுபடுத்துகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டே வருகின்றனர். தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கட்சியின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே தொடர்ந்தும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பலப்படுத்த முடியும். தமிழீழ விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய ஆயுத கட்சிகள் கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்பட்ட விதம் தான் தமிழீழம் என்ற கனவை சிதைத்தது. தற்போது அரசாங்கம் பெரும்பான்மையை வைத்து சர்வாதிகாரப் போக்குடன் செயற்பட்டு வருகின்றது. பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறுகின்ற நடவடிக்கையாகவே இன்றைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் இருக்கின்றது.

பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்லாது வேறு சில தமிழ் கட்சிகளும் அவர்களுடைய அரசியல் நடவடிக்கைகளை நகர்த்திக்கொண்டு சென்றாலும் இன்றைய அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளை எதிர்க்க முடியாத அளவிற்கு அவர்கள் அசுர பலம் பொருந்தியவர்களாக மாறியிருக்கிறார்கள் என்பது தான் இன்றைய அரசியல் யதார்த்தம்.

சர்வதேச நாடுகள் தங்களுடைய சுய லாப அரசியலுக்காக தமிழ் மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தரக்கூடிய வகையில் அவர்களுடைய மன நிலையும் இல்லை. இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை காத்திரமான முறையில் முன்னோக்கி நகர்த்திச் செல்லவேண்டிய தேவையிருக்கிறது.

தீர்வு கிடைக்கும். தீர்வு கிடைக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றனர் ஆனால் ஏமாற்றத்தையே தொடர்ந்தும் தமிழினம் சந்தித்து வருகிறது. இதனால் தான் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வெறுப்பை வெளிப்படுத்துகின்றார்கள். அதன் வெளிப்பாடு தான் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பல இடங்களில் த.தே.கூ. தோல்வியடைவதற்கு காரணமாக அமைந்தது. ஆகவே தமிழ் மக்களாகிய நாம் ஒன்றை சிந்திக்கவேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்திகளில் ஈடுபடலாம். ஆனால் தீர்வு திட்டம் என்பதில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது என்பது தமிழ் மக்களுடைய இருப்பிற்கு பாரியதொரு தாக்கத்தைத் தான் ஏற்படுத்தும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

126



மிகப்பெரிய பத்திரிகைகள் நாட்டின்பொதுவான வாழ்வாதாரப் பிரச்சினை பற்றிப் பிரசுரிப்பதுடன் தெரிவிக்கும் செய்தியில் நம்பகத்தன்மை எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கெரில்லாப் படைகளின் செயற்பாடுகள் பற்றிச் சமுதாயத்திற்குச் சரியாகத் தகவலும் தருகின்றன. பொதுப்பண்பைக் கொண்ட இப்பதிப்புகள் தவிர சமூகத்தின் வெவ்வேறு பிரிவினருக்கான மிகவும் குறுகிய வட்டப் பிரச்சினைகளை ஆராய்கின்ற ஏனைய பிற பதிப்புக்களையும் கொண்டிருக்க வேண்டும். குடியானவர்களுக்கான பத்திரிகை விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலிருக்கின்ற அவர்களது தோழர்களைப்பற்றிய செய்தியையும் ஏற்கனவே புரட்சியின் சாதகமான பலன்களை அனுபவிக்கின்றவர்களைப் பற்றிய செய்தியையும் மக்களுக்குச் சென்றடையச் செய்யும் இப்பத்திரிகைள் குடியானவர்களின் முயற்சியையும் பிரதிபலிக்கின்றன. இதையொத்த பண்பையே தொழிலாளர்களுக்கான பத்திரிகைகளும் கொண்டிருக்கின்றன.

வெவ்வேறு வகையான பிற பத்திரிகைகளையும் அத்துடன் அவற்றின் சிறப்புச் செய்திப் பத்திரிகைளையும் வெளிவிடுவதும் சாத்தியமாகும். இவற்றின் பக்கங்களில் நாட்டினது மக்கள் செய்ய வேண்டிய பணிகள் பற்றி விவரிக்கப்படுகின்றது. இம் மக்கள் கெரில்லாப் படைப்பிரிவின் வீரர்களாக இல்லாவிட்டாலுங்கூட நாச வேலை மேற்கொள்வதிலும் படுகொலை போன்ற ஏனைய நடவடிக்கைகளிலும் வர்கள் பங்கெடுத்துக்கொள்கின்றனர். பரப்புரை அமைப்பின் ஒழுங்கமைப்பு வரையறைக்குட்பட்டு எதிரிப்படைச் சிப்பாய்களுக்கான சிறப்புத் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்படுகின்றன.

இதனை வாசிப்பதால் எதிரிச் சிப்பாய்கள் முன்னர் தாங்கள் அறிந்திராத பல விடயங்களைத் தெரிந்து கொள்கின்றனர். இங்கேயே கெரில்லா அமைப்பின் அறிக்கைகள் அரசியல் பரப்புரைப் பதிப்புகள் போன்றவற்றின் பாரிய பயன்பாட்டையும் குறிப்பிட வேண்டும்.

கெரில்லாக்களின் வலயப் பிரதேத்திலிருந்து மேற்கொள்கிற பரப்புரை மிகச்சிறந்த பலாபலன்களை தருகின்றது. இதனது இலக்கு - பிரதேச மக்களுக்கு கெரில்லா அமைப்பின் நோக்கத்தைத் தெரியப்படுத்துவதாகும். இங்கே கெரில்லா இராணுவத்தின் நடுவக அமைப்பான பத்திரிகை வெளியீடு, அரசியல் பரப்புரை பதிப்புக்கள், அறிக்கைகள், வானொலி ஒலிபரப்புச்சேவை போன்றவற்றின் தேவையும் தோற்றம் பெறுகின்றது.

வானொலி ஒலிபரப்பில் கெரில்லாக்கள் கொண்டிருக்கின்ற பணிகளும்வான் காப்பு நடவடிக்கைகளும் தெரியப்படுத்துகின்றன. வான்காப்பு நடவடிக்கையின் அர்த்தம் யாதெனில், எதிரியின் வான்படைகள் இருக்கின்ற இடத்தை அதனது பெயருடன் தெரியப்படுத்துவதாகும்.

வழக்கமான வகைப் பத்திரிகை வெளியீடே தேசிய மட்டத்தில் பரப்புரையை மேற்கொள்வதற்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்படுகின்றது. ஆனால் இதில் பல்வேறு வகையான மிகவும் புதிய துல்லியமான தரவுகள், சமர் வாழ்க்கை கட்டங்கள்,வாசகர்களைக் கவர்கின்ற கணிசமானளவு பிற செய்திகள் போன்றவற்றையும்உள்ளடக்கவேண்டும். பிறநாடுகளிலிருந்து வெளியாகும் விடுதலைப்போராட்டத்துடன் நேரடியாக தொடர்புள்ள செய்திகள் சாத்தியத்தைப் பொறுத்து உண்மைநிலை விளக்கத்துடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், மிக உண்மையான , மக்களால் நன்றாகப் புரிந்துக்கொள்ளக்கூடிய, அவர்களது அறிவையும் உணர்வையும் தொடுகின்ற பரப்புரையாக நாங்கள் வாய் வழிப்பரப்புரையே கூறலாம்.அதாவது வானொலி மூலமாக பரப்புரையாகும். வானொலி - இது மிக இன்றியமையாத ஊடகமாகும். விடுதலைபோராட்டத்தின் வளர்ச்சிப்போக்கு பிரதேசத்தின் அல்லது நாட்டின் ஒவ்வொரு குடிமகனாலும் ஆழமாக உணரப்படும் போது , ஊக்கம் தருகின்றது.நண்பர்களையும் எதிரிகளையும் இனங்காட்டுகின்றது.

ஆனால்,வானொலி மக்கள் பரப்புரையின் பிரதான கோட்பாட்டிற்குக் - தெரிவிக்கும் செய்தியின் உண்மை தன்மை - கீழ்ப்பட்டிருக்கவேண்டும். எவ்வளவு அழகாகத் தெரிவிக்கப்பட்டாலும் பொய் எப்பொழுது மிக ஆடம்பரமற்ற உண்மையை விட மிக மோசமானதாகும்.

வானொலி மூலம் சமர் நடவடிக்கை, வெவ்வேறு வகையான எதிர்பாடுகள், மக்கள் படுகொலைகள் போன்றவற்றைப் பற்றிய சூடான செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன. இவற்றுடன் சேர்த்துச் சாத்தியமான போதனையூட்டக் கூடிய தகவல்கள்,சிலவேளைகளில் புரட்சித் தலைவர்களின்உரைகள்போன்றனவும் ஒலிபரப்பப்படுகின்றன. உரைகளினால் உள்ளூர் மக்கள் தங்களுக்கான பயன்படக்கூடிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

எங்களது கருத்துப்படி, புரட்சி அமைப்பின் நடுவக நிர்வாகத்தின் கீழுள்ள பத்திரிகைகளின் பெயர்கள் ஏதோவொரு மகத்தான ஒற்றுமைப்படுத்தும் குறியீடாக அமைய வேண்டும். எடுத்துகாட்டாக, இது யாராவதொரு தேசிய வீரர்களில் ஒருவனின் பெயரைத் தாங்கியதாகவோ இதை போன்ற ஏதாவது வகையிலோ இருக்கலாம். இதனது முன்னணிக் கட்டுரைகள் எப்பொழுதும் கெரில்லா ஆயுத அமைப்பின் நோக்கத்தை விளக்குகின்றன. மக்களிடத்தில் தேசப்பற்றை வளர்க்கின்றன. அவர்களின் அரசியல் செயற்திறனை அதிகரிக்கின்றன. இப்பத்திரிகையில் வாசகர்களுக்குக் குறித்தளவு விருப்பை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளும் இருக்க வேண்டும்.

**வேவும் தகவலும்**

"உன்னையும் உனது எதிரியையும் தெரிந்துக்கொண்டால், எந்த வித எதிர்ப்புமின்றி நீ நூற்றுக்கணக்கான சமரை நடத்தலாம்" - இது பைபிளைப்போன்ற போதனையைக் கொண்டுள்ள சீன வாக்கியமாகும்.

இது பூரணமாகக் கெரில்லாப் போரிற்கும் பொருந்துகின்றது. நம்பகமான தகவல் உதவுவதைப்போல, வேறெதும் கெரில்லாப் படைப்பிரிவின் சமர்ச் யெற்பாட்டு வெற்றிக்கு உதவுவதில்லை. நம்பகமான தகவல் படிப்படியாக பிரதேச மக்களுக்குத் தெரவிக்கப்படுகின்றது. அவர்கள் வேறு பிரதேத்தில் என்ன நடக்கிறதென்பதைத் தமது சொந்த இராணுவத்திடம் தமது காவலர்களிடம் எடுத்துரைப்பதற்காக வருகின்றார்கள்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# இலங்கை செய்த இனப்படுகொலைகளுக்கும், போர்க்குற்றங்களுக்கும் நேரடி, மறைமுக உதவிகளைச் செய்த நாடுகள்

திரும்பிய பக்கம் எங்கும் மனிதர்கள் பிணங்களாக, அவற்றினில் பாதி சிதறியும் மீதி சிதைந்தும் கிடந்தன. அந்த நிலையிலும் அவலப்பட்டு சிதறி ஓடிய சனங்களின் தலைகளில் கச்சிதமாய் வந்திறங்கின பாலாய்ப் போன குண்டுகள். அதனால் சாதாரணமாய் எப்போதும் பார்க்கக் கிடைக்காத நரகமெனும் கொடூரத்தையும் கூட கண்முன்னே காட்ட வைத்தது ஓர் யுத்தம். காலம் அதற்கு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் எனப் பெயர் பொறித்துப்போனது.

இரத்தச் சரித்திரமான அந்த இன அழிப்புப் படலம், இன்றுவரை இரத்தம் கசிந்து கொண்டிருக்கும் காயமாக மாறாத வடுவை ஏற்படுத்தியது 2009 மே 18 இல். குருதியால் வரையப்பட்ட அந்த நாளை தமிழர்கள் மட்டுமல்ல அத்தனை எளிதில் எவருமே மறந்து விடமாட்டார்கள் என்பது திண்ணம். நாட்டில் தீவிரவாதத்தை அழிக்கின்றோம், அதற்காக விடுதலைப்புலிகளைக் கொல்கின்றோம் என்ற பெயரில், திட்டமிட்டு தமிழர்கள் தலைகளில் அள்ளி வீசிய குண்டுகளால் கண் திரும்பிய பக்கம் அனைத்திலும் புதைக்கப்படாத உடலங்கள். அத்தோடு **சிதறிப்போன அவயவங்களால் ஏற்பட்ட செங்குருதி ஆறாக மாறி நந்திக்கடல் எனும் சிறப்புக் கடற்கரையை சிவப்பாக்கிய நாட்களை இன்று நினைக்கையிலும் இரு விழிகளும் சிவப்பாகும் ஒன்று கோபத்தில், மற்றொன்று வேதனையில்.** அத்தகைய கொடூரங்களையும் சுமந்து கொண்டு, வேர் அறுக்கப்பட்டதாக பலர் இன்றும் நினைக்கும் ஓர் விடுதலைப் போரின் வடு இன்று மௌனமாய் காற்றில் இரத்த வாடை கலந்து வீசுகின்றது முள்ளிவாய்க்கால் பகுதியில்.

2009 மே 18 ஆம் திகதிக்கு சில நாட்களுக்கு முன்னர் வரையிலும் ஓர் விடுதலைக் கனவு மெய்படப் போகின்றது என்ற ஆவல் ஈழத் தமிழர்களிடையே மட்டுமல்ல உலகத் தமிழர்கள் அனைவரிடமும் இருந்த ஓர் அவா. ஆனால் திடீரென தலைகீழாகிப் போனது ஓர் சரித்த வரலாறு. தமிழரின் தலைகளில் குண்டுகளும் மனங்களிலும், நம்பிக்கையிலும் மண்ணும், மரணமும் வாரி இரைக்கப்பட்டன. அதனால் என்ன நடக்கின்றது?, ஏன் நடக்கின்றது?, ஏன் கொல்லப்படுகின்றோம்? என்பது கூட தெரியாமல்பதறியபெண்களுக்கும், புரியாத குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் ஏன் முதியோருக்கும் கூட என அனைவருக்கும் பாகுபாடுகளும், பாரபட்சமும் இன்றி அவல மரணம் எனும் பரிசுகள் வாரி வழங்கப்பட்டன. அந்த கொலை (இன) வெறி கொண்ட யுத்தம், இப்போது 8 வருடங்களை விழுங்கி விட்டு சலனமின்றி நிற்கின்றது என்பது தீராத வேதனையே.

ஆனால் யுத்தம் என்று கூற முடியாத அளவு நடைபெற்ற அந்த இன அழிப்பு, கொடூரங்களுக்கு தீர்வுகளோ, தண்டிப்புகளோ இன்று வரை கொடுக்கப்படவில்லை என்பதற்கு ஆத்திரப்படுவதா அல்லது துயரப்படுவதா என்பதும் புரியாத மனநிலை. அந்த இன அழிப்பிற்கான தண்டிப்பை பற்றி கேட்கும் போது பதிலமைகின்றது இவ்வாறாக. அதாவது, "அந்த யுத்தம் இன அழிப்பு இல்லை, இனப்படுகொலை மட்டுமே. தண்டிப்பிற்கு ஆதாரம் வேண்டும், தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தமே அது". இந்த கேலிக்குரிய வாதத்தினை, மனித உரிமை அமைப்புகளும் தலையாட்டி பொம்மைகளாய் கேட்டுக் கொண்டிருப்பது எத்தகையதோர் மிகப்பெரிய கேலிக் கூத்து. கொடுத்த, கிடைத்த ஆதாரங்களுக்கு என்ன நடந்தது? அதற்கும் மேல் ஆதாரம் வேண்டும் எனில் சுட்டுக் கொன்றதால், சுடுகாடு கூட செல்லாமல் சொர்க்கம் சேர்ந்த உயிர்கள் தான் மீண்டு வந்து சாட்சியமளிக்க வேண்டுமா? என்றும் கேட்கத் தூண்டும்.

கொத்துக் கொத்தாக குண்டுகள் போட்டும், தடை செய்யப்பட்ட இரசாயன குண்டுகளை கொட்டியும் பல பொது மக்களை கொன்றழித்தது மட்டுமல்லாமல், அடைக்கலம் அளிக்கின்றோம் எனக் கூறி வெளிப்படையான துரோகத்தனமான அழிப்பு நடந்தேறியது முள்ளிவாய்க்கால் களத்தில். வரலாற்றில் இந்த முள்ளிவாய்க்கால் இன அழிப்பும், அழிந்து போகாமல் பதியப்படவேண்டிய ஒன்றே. 10 வருட பூரணத்தைச் சந்தித்து விட்ட நிலையிலும், இனியும் என்றாவது இந்த கொலைகளுக்கு தண்டிப்புகளும் பதில் கூறல்களும் கிடைக்கும் என எதிர்பார்ப்பதும் ஒரு வகையில் வேடிக்கைத்தனமானது. அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்கின்றது. அதாவது, **சர்வதேசமே இணைந்து நடத்தி அப்பாவிகளைக் கொன்றதோர் கோர யுத்தத்திற்கு சர்வதேசமே நீதிபெற்றுத்தரும் என எதிர்பார்ப்பதும் கூட அறியாத்தனமானதோர் முட்டாள்தனம் எனலாம்.** அதுவும் தவிர இன்றுவரை மர்மம் காத்துக்கொண்டிருக்கும் முள்ளிவாய்க்காலில் கொலைகள் மட்டுமா அரங்கேறியது? அதனையும் தாண்டி கொலை செய்யப்பட்டவர்களை தவிர எஞ்சியவர்கள் முள்வேலிகளுக்குள் அடைக்கப்பட்டனர். அதிலும் பலர் சித்திரவதை முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட, கணக்கிலடங்காதோர் பலர் காணாமலும் ஆக்கப்பட்டனர். அவ்வாறு தொலைந்து போக வைக்கப்பட்ட உறவுகள் இன்றுஉயிருடன் இருக்கின்றார்களா? அல்லது கொல்லப்பட்டார்களா? என்று இன்றும் கதறும் பொதுமக்கள் கணக்கற்றவர்கள்.

ஆனால் இதற்கு கூட தீர்ப்போ அல்லது தீர்வோ தர எவரும் இதுவரை மெய்யாக முன் வந்ததாக தெரியவில்லை. ஆனாலும் ஒன்று அரசியல் இலாபம் இருந்தால் இதுவும் கூட தீர்க்கப்படலாம். எவ்வாறெனினும் அழிப்புகளை மீட்டிப்பார்ப்பது வேதனையை மீண்டும் வரவழைப்பதற்கு சமமானது என்பது நன்றாகவே தெளிவான விடயம். இருந்தாலும் நடந்த அழிப்புச் சம்பவத்தை மீட்டாவிட்டால் சிலவேளைகளில் அந்த இன அழிப்பை பொய்யாகக் கூட பலர் சித்தரித்து விடலாம் என்பது பின்னோக்கிய காலப் பயணத்தை பார்க்கும் போது தெளிவாகப் புலப்படலாம்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை ராஜபக்ச அதிபராக இருந்த காலப்பகுதியில் ஈழத்தின் விடுதலைப்போர் உச்சத்தை எட்டியது. அதனால் இலங்கையின் முப்படைகளும் இணைந்து வடக்கை துவம்சம் செய்து கொண்டிருந்தது. இதற்கு இலங்கை இராணுவம் மட்டுமல்ல, பலம் மிக்க சில நாடுகளின் பக்க பலமும் இலங்கைக்கும், இலங்கை இராணுவத்திற்கும் தாராளமாக கிடைத்தன. அதனால், முள்ளிவாய்க்காலினை கடல், வான், தரை முப்புறமாகவும் இராணுவம் (கள்) சிதைக்கத் தொடங்கின. அங்கு பொழிந்து கொண்டிருந்த குண்டுகளுக்கும், எறிகணை வீச்சுகளுக்கும் எவரும் தப்பிப் பிழைக்கவில்லை. அலறியபடி மக்கள் அவலச் சாவினை அடைந்து கொண்டிருந்தனர். அங்கே சிதறிய உடல்களைக் கண்டு சிரித்தபடி வெறி கொண்டு இராணுவங்கள் புலிகள் என்ற போலிப் போர்வையில் அப்பாவிகளை அழித்தன. அந்த கடைசி மூன்று நாள் யுத்தத்தில் மட்டும் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமிழராக, அதுவும் வடக்கில் பிறந்த குற்றத்திற்காக கொல்லப்பட்டனர்.

இவ்வாறு முள்ளிவாய்க்கால் திக்கெட்டும் மரண ஓலம் எதிரொலித்துக் கொண்டிருந்த தருணம், செல்களின் தாக்குதலால் படுகாயமடைந்து தப்ப முடியாத காரணத்தால் பரிதாபமாக கிடந்த பல அப்பாவிகளை கொத்தாக அள்ளி உயிருடன் புதைத்தன யுத்தக்கள இராணுவம். யுத்தம் என்ற பெயரில் அப்போது நடைபெற்ற இனப்படுகொலைகளை வார்த்தைகளால் விரிவு அல்லது தெளிவுபடுத்த முடியாது. வடக்கு தமிழர்களுக்கு எதிரான வெறித்தனங்கள் அவை. பாதுகாப்பு வலயங்களுக்குள் வந்தவர்கள், சரணடைந்தவர்கள் உட்பட அனைவருக்கும் மரணங்கள் வாரி வழங்கப்பட்டன. யுத்த ஆரம்ப கட்டத்தில் இரசாயன குண்டுகளான பொஸ்பரஸ் குண்டுகளை பயன்படுத்த ஜெனிவா அமைப்பு முற்றாக தடை விதித்தது.

ஆனால் முள்ளிவாய்க்காலில் அவை தாராளமாகவே பயன்படுத்தப்பட்டன. பொது மக்கள் தவிர பாடசாலைகள்,



மருத்துவமனைகள், குடியிருப்புகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. அப்போது ஜெனிவா ஓய்விற்காக சென்று விட்டதா என்பதும் இன்று வரை மர்மமே. அதனால் இவற்றினை இன அழிப்பு எனச் சொல்லாமல் வேறு எப்படி சொல்ல வேண்டும். சொல்ல முடியும் எனத் தெரியவில்லை.

யுத்தம் என்பது அங்கு வெளிக்காட்டப்பட்ட போலியான விடயம். ஆனால் அன்று முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றப்பட்டது தமிழர்களை அழிக்கும் இன அழிப்பு தான் என்பதனை உண்மையறிந்தவர் எவரும் மறுக்கமாட்டனர். இவ்வாறான ஓர் கொடுங்கொலைகளை செய்து, பிணங்களை பார்த்த பின்பும் கூட கொலை வெறி அடங்கவில்லை அப்போது புலிகளுக்கு எதிராக போர் செய்கின்றோம் எனக் கூறிக் கொண்டவர்களுக்கு. அதனால் போரின் பின்னர் முள்வேலிகளால் அமைக்கப்பட்ட முகாம்களுக்குள் எஞ்சிய மக்கள் அனுப்பப்பட்டனர் / அடைக்கப்பட்டனர். முகாம் என்ற பெயரில் அங்கும் சாவினைவிடக் கொடிய துன்பம் அனைவருக்கும் கிடைத்தன. குறிப்பாக பெண்களுக்கு. பிணத்தையும் விட்டுவைக்காத வெறிமிக்கவர்கள் சதைப்பிண்டமாக பெண்களைப் பார்த்தால் என்ன நடக்கும்? தமிழ்ப்பெண்கள் மீது வெறித்தனமான பாலியல் வன் கொடுமைகள் நடாத்தப்பட்டன. இதனைச் செய்வதனை விடவும் சுட்டுக் கொன்றிருந்தால் மன மகிழ்வுடன் செத்திருப்பார்கள் அங்கு பாதிக்கப்பட்ட அப்பாவிப் பெண்கள். மாற்றான் மனைவியாக இருந்தால் என்ன? பிள்ளைக்கு தாயாக இருந்தால் என்ன? சிறுமியாக இருந்தால் என்ன? முள்ளிவாய்க்காலில் யுத்தம் செய்த இராணுவத்தினருக்கு அவர்கள் சதைப் பிண்டமான காமப் பொருள் மட்டுமே. கூட்டாகச் சேர்ந்து இத்தகைய ரணக் கொடூரத்தை செய்து விட்டு இன்று "இந்திய இராணுவமே தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் கொடுமை புரிந்தது, இலங்கை இராணுவம் ஒழுக்கமானது" என கேவலம் எனும் பட்டம் மாறி மாறி சூட்டப்பட்டு வருகின்றது. இங்கு குற்றம் செய்தவன் மானம் கெட்டவன் என்றால், அதனை வேடிக்கை பார்த்தவனுக்கு என்ன பெயர் என்பது என் அகராதியில் இல்லை. இவ்வாறு முள்ளிவாய்க்காலில் நடந்த அவலங்களை இன்று மறைக்கப் பார்க்கலாம், மறுக்கவும் கூட பார்க்கலாம். ஆனால் மாற்றியமைக்க முடியாது என்பதனை குற்றம் செய்தவர் உணரவேண்டிய காலம் எப்படியும் வந்தே தீரும். அது அரசன் வடிவில் வந்தாலும் சரி, தெய்வத்தின் வடிவில் வந்தாலும் சரி தீர்ப்புகளும் தண்டனைகளும் கிடைக்கும் என்பதும் திண்ணம். ஆனால் அது யாரால்? எப்போது? எப்படி என்ற கேள்விகளுக்கு மட்டும் இப்போதைக்கு மௌனம் அர்த்தம் மிக்க பதிலாகும்.

இலங்கையில் நடந்த இந்த கொலைகளை, கொடூரங்களை இலங்கை(அப்போதைய) அரசு மறுத்த போது 2010ஆம் ஆண்டு நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்என்றசர்வதேச அமைப்புவிசாரணை செய்து பல போர்க் குற்றச்சாட்டுகளை உறுதி செய்தது. அதன் பின்னர் அமெரிக்க சட்ட வல்லுநரான பிரான்சிஸ் போய்ல் என்பவர், "1948 ஆம் ஆண்டு இன அழிப்பு தொடர்பாக ஓர் உடன்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் கையெழுத்தினை இட்டுள்ள 140 நாடுகளில் ஏதாவது ஓர் நாடு அல்லது பல, இலங்கை அரசு செய்த இனப்படுகொலைகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால் விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவித்தார். ஆனால் அது என்னவாயிற்று அதற்கடுத்து தொடர்ந்து என்ன நடக்கின்றது என்பது இன்றும் மர்மமாகவே இருக்கின்றது. இங்கு இலங்கை செய்த இனப்படு கொலைகளுக்கும், போர்க் குற்றங்களுக்கும் நேரடி, மறைமுக உதவிகளைச் செய்த நாடுகள் இன்று, இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவு அளப்பறியவை என்பதனையும் மறக்கலாகாது. அதனால் நாளையாவது இதற்கான தீர்ப்புகள் கிடைக்கும் என்பதும் *சீச் சீ* இந்தப் பழம் புளிக்கும் கதையாகி விடுமோ என்பதும் இப்போதைக்கு ஐயம் கலந்த அச்சம்.

அதேபோல 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாடுகளிடம் செய்து கொண்ட இனப்படுகொலைகளை தடுப்பது, தண்டிப்பது தொடர்பான உடன்பாடு மூலம் இலங்கை மீது போர்க்குற்றம் விசாரிக்கப்படும் எனப்பட்டது. இதுவும் நடந்ததா? எனத் தெரியவில்லை. இவை தவிர சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை போன்றனவிடம் இன அழிப்புகளுக்கு, இனப்படுகொலைகளுக்கு, போர்க்குற்றங்களுக்கு எதிராக பல உடன்பாடுகள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் இலங்கை விடயத்தில் இன்று வரை ஏட்டளவில் மட்டுமே உள்ளன. தப்பித் தவறிக் கூட நடைமுறைப்படுத்தப்பட்டுவிடக் கூடாது என்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் மட்டுமல்ல சர்வதேசமும் மிக உன்னிப்பாக இருக்கின்றன என்பதே மறைக்கப்படும் உண்மை. உதாரணமாக அயல் நாடான இந்தியாவிற்கு இலங்கைத் தமிழர்கள் தொப்புள் கொடி உறவாம். இருந்தும் என்ன பயன். இலங்கையில் இன அழிப்பிற்கு பங்களிப்பு செய்ததே அந்த தொப்புள் கொடி உறவுதான்.

இந்தியாவில் இருக்கக்கூடிய பல அரசியல்வாதிகளைப் பொறுத்தவரைக்கும் ஈழத்தமிழர்கள் என்பவர்கள், அவர்களின் அரசியல்இலாபங்களுக்கானபகடைக்காய்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மை. முள்ளிவாய்க்கால் என்பது இறுதியில் செய்யப்பட்ட வெளிப்படையாக தெரிந்ததோர் இன அழிப்பு. இது தவிர தொடர்ந்து முத்தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் தமிழர்களுக்கு பாரிய அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டன. அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை என்றுமே வார்த்தைகளால் வர்ணித்திட முடியாது. அவை உணரவும் கூட முடியாத அளவு கொடூரமானவை. எது எவ்வாறாயினும் **இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பினை ஒட்டுமொத்த சர்வதேசமே வேடிக்கை தான் பார்த்தது இன்றும் அதனையே செய்கின்றது.**

ஆனால் பெயருக்கு மட்டும் ஏதோ போர்க் குற்றம், விசாரணை, தீர்ப்பு என்ற மாயச் சித்தரிப்பு இன்றும் இருக்கத்தான் செய்கின்றது. இவ்வகையில் **முள்ளிவாய்கால் எனப்படும் குருதிச் சரித்திரம் மறைக்கப்படலாம், ஆனால் அதனால் ஏற்பட்ட வடுவினை தமிழர்கள் மனதில் இருந்து அகற்றிட முடியாது என்பது மட்டும் உண்மை.** இவை அனைத்திற்கும் காலம் பதில் சொல்லும் என்பதும் ஓர் எதிர்ப்பார்ப்பு

இரணியன்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யாத வரையிலும் தமிழரசுக்கட்சிக்கு ஆபத்தில்லை

**மறவன்**



தற்போதைய காலகட்டத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கக்கூடிய கட்சிகளான தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ போன்ற கட்சிகளைப் பதிவு செய்வதாயின் ஒற்றுமையை நிலைநாட்டுவதென்பது மிகக்கடினமான விடயமாகவே அமையும். அவ்வாறு பதிவுசெய்யப்பட வேண்டுமாயின் ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது. அவர் அதற்கெதிராகவே செயற்பட்டுவந்த ஒருவரும் கூட. பொதுவாக இக்கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் பதிவுசெய்யப்படுமாயின் தமிழரசுக்கட்சியினால் இக்கட்சிகள் அனைத்தும் ஓரங்கட்டப்படும். இறுதியில் துரோகிகள் என்கின்ற பட்டமே இவர்களுக்குச் சூட்டப்படும்.

இதேவேளை தமிழரசுக்கட்சி ஏனைய கட்சிகளை விட்டுப் பிரிந்து செல்லுமாயின் அவர்களுக்கும் துரோகிகள் என்கின்ற பட்டமே சூட்டப்படும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கட்டமைப்புக்களை எவ்வாறு உடைக்கலாம் என அரசு திட்டம் தீட்டி வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே இக்கட்சிகளிடையே குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழரசுக் கட்சியிலுள்ளவர்கள் தமது கட்சி எந்தவொரு ஆயுத கலாசாரங்களிலிருந்தும் வரவில்லை. அஹிம்சை வழியிலான போராட்டங்களை முன்னெடுத்தே வந்திருக்கின்றது. ஆகவே நாங்கள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்கின்ற போர்வையில் அவர்களுடைய நிலைப்பாடுகள் இருக்கின்றது.

ஆயுதக் கட்சிகளைப் பொறுத்தவரையில் ஒரு குடையின் கீழ் நின்று தேர்தலில் போட்டியிட்டாலும் கூட, அகழிக்குள் காலை வைத்து மீளமுடியாததொரு சூழல் உருவாகும். ஆகவே கட்சிகள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளாக செயற்படுவதே சிறந்தது. தற்போதைய காலகட்டத்தில் போராட்டம் மௌனிக்கப்பட்டிருக்கின்றது. மீளவும் தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தத்தினை ஆரம்பிப்பதாகவிருந்தால் ஆயுதக்குழுக்கள் இலங்கையரசினால் வரவேற்கப்பட்டு அதிகாரங்களை அவர்களுக்கு கையளிப்பார்கள். இவ்வாயுதக்குழுக்களும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலையில் கொலை, கொள்ளை, கப்பம், ஆட்கடத்தல் என்கின்ற செயற்பாடுகளில் இறங்கக்கூடும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் குழப்ப நிலையினை உருவாக்கி அரசு அதில் குளிர்காயலாம் என நினைக்கிறது. மூத்த அரசியல்வாதிகள் மற்றும் பல ஆய்வாளர்களுடைய கருத்தின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பலவீனப்படுத்தும் அனைத்து திட்டங்களையும் அரசு ஆரம்பித்துள்ளது. குறிப்பாக வடமாகாணசபைக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் அரசின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப செயற்படுமளவிற்கே உள்ளனர். முன்னாள் வடமாகாண ஆளுநர் ஜி.எ.சந்திரசிறி, முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் வடமாகாண சபையின் அவைத்தலைவர். சி.வி.கே.சிவஞானம், முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் போன்றோர் இவ்வாறு செயற்பட்டு வருவதாகவும் இராஜதந்திர வட்டாரங்களில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமையும் விரைவில் மாற்றியமைக்கப்படவேண்டும். ஒரு வகையில் சி.வி.விக்னேஸ்வரன் சிங்களப் பேரினவாதிகளோடு இரண்டறக் கலந்தே இருக்கின்றார். எதிர்வரும் காலகட்டங்களில் எதுவும் இடம்பெறலாம். நீதியரசராகவிருந்த சி.வி.விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் குறித்து வட மாகாண சபையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் போவதாகவும் அப்போது செய்திகள் வெளிவந்தன. எது எவ்வாறாகவிருப்பினும் கடந்த காலங்களில் வட மாகாணசபையில் உள்ள ஒருசிலர் மாத்திரமே தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பினார்கள். குறிப்பாக ரெலோ கட்சியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட என். கே.சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எப் இன் ரவிகரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதியாக அனந்தி சசிதரன் ஆகிய மூவருமே தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றார்கள். அவ்வாறு பிரச்சினைகளைக் கூறும் பொழுதும் அவர்களை அதிகமாக கதைப்பதற்கு சி.வி.கே.சிவஞானம் அவர்கள் வட மாகாண சபையில் கடந்த காலங்களில் அனுமதி வழங்கவில்லை.

ஆனால் அரச தரப்பினர் உரையாற்றும் பொழுது மாத்திரம் அதிகமாக உரையாற்ற அனுமதியுண்டு. வடமாகாண ஆளுநரும் அரச பக்கம் சார்ந்து இருப்பதனால் சி.வி.கே.சிவஞானத்திற்கோ, விக்னேஸ்வரனுக்கோ அவருடைய அதிகாரத்தினை மீறி செயற்படமுடியாதிருந்தது. அதற்காக இருவரும் தமிழ்த்தேசியத்தில் பற்றில்லாதவர்கள் அல்ல என்று கூறிவிடமுடியாது. சந்தர்ப்பமும், சூழ்நிலையும் தான் காரணம். ஆகவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினைபதிவு செய்யாது இவ்வாறே இழுத்தடித்துக் கொண்டு செல்கின்றபொழுது அரசினால் இதரகட்சிகளை உடைக்க முடியாத சூழ்நிலை உருவாகும். அவற்றை மனதிற்கொண்டே மாவை சேனாதிராஜா கட்சியை பதிவுசெய்ய வேண்டிய தேவை தற்போதைக்கு இல்லை என்ற பொருட்பட தெரிவித்திருக்கின்றார் எனலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்டதே இந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. ஏன் அவர்கள் இக்கட்சியினை உருவாக்கி ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை இணைத்துக் கொண்டார்கள். ஆயுதப் போராட்டங்கள் ஒரு கட்டத்தினை கடந்து சென்று கொண்டிருக்கின்ற பொழுது பேச்சுவார்த்தைக்காக அரசியல் கட்சிகளை உருவாக்கி அதனூடாக தமது உண்மைகளை உலக அரங்கிற்கு எடுத்துரைக்க முடியும் என்கின்ற காரணத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், முன்னாள் புளொட் உறுப்பினர் டி.சிவராமுடன் இணைந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை உருவாக்கினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய டி.சிவராம் பாராளுமன்ற எல்லைக்குள் வைத்து அரசினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் சுட்டுக்கொல்லப்பட்ட பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிலைமை இவ்வாறிருக்க, ஆயுதக்குழுக்களை பதிவு செய்வதனூடாக தலைவர், செயலாளர், பொருளாளர் என்று பார்க்கின்ற பொழுது பொதுவாக கூட்டமைப்பு என்றே பார்க்க முடியும். தமிழரசுக் கட்சியிலுள்ளவர்களுக்கு கூடுதலான அங்கத்துவம் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகும். அது மட்டுமல்லாது தமிழரசுக் கட்சியினுடைய பழைய கோட்பாடுகளை தூக்கியெறியவேண்டிய நிலை தோன்றும். ஆனால் விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பாரிய பலமாக திகழ்கின்றது. இதில் யாரேனும் தவறுகள் இழைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்வார்களாக விருந்தால் அது ஆபத்தாகவே முடியும். அதனைத் தவிர்த்துக் கொள்வது தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், இதர கட்சிகளுக்கும் சிறந்தது. ஆனால் இயக்கக் கட்சிகளிலுள்ளவர்கள் தமிழரசுக் கட்சியிலுள்ளவர்களுடன் எதிர்த்துப் பேசுவதற்கு தயங்குகின்றார்கள். ஒரு சிலர் எதிர்த்துப் பேசுகின்றார்கள். அவர்கள் பேசினாலும் அது பெரியளவில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதற்குக் காரணம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மற்றும் அதனது சின்னம் வீடு என்பதும் தமிழ் மக்கள் மத்தியில் ஆழப்பதிந்த தொன்றாகும். இதற்கெதிராக யார் செயற்பட்டாலும் துரோகிகள் என்றே கருதப்படுவார்கள். காரணம் ஒட்டுமொத்தத்தில் தமிழினம் பாதிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள சூழ்நிலையில் ஆயுதப்போராட்டத்தின் வழியே வந்தவர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளமுடியாதென முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறிய விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளும் உள்ளடக்கப்படுகின்றனர். அவர்களினுடைய செயற்பாடுகள் தற்பொழுது இல்லை என்ற காரணத்தினால் முதலமைச்சர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

இவ்வாறான நிலையில் வட மாகாண சபை, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆயுத கலாசாரத்திலிருந்து நாங்கள் வந்தவர்களென பல வழிகளிலும் சுட்டிக்காட்டி தமது அரசியலை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு இசைவாக்கமாக ஏனைய கட்சிகள் நடந்துகொள்வதே அவர்களுக்கு சிறந்தது. அதனை மீறிய செயற்பாடுகளில் இறங்குவார்களாகவிருந்தால், உதாரணம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தங்கேஸ்வரி, பத்மினி, சிவநாதன் கிஷோர் போன்றவர்களுக்கு என்ன நடந்ததோ அதேநிலைதான் மீதமாகவிருக்கின்ற இயக்கக்கட்சிகளுக்கும் நடக்கும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினுடைய நடவடிக்கைகள் தமிழ்த்தேசியத்திற்கு உட்படாமல் அதற்கப்பால் அரச நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப செயற்படுகின்றார்கள் எனக் காரணங்காட்டி அக்கட்சியிலிருந்து வெளியேறினார். அவர்கள் அரசிற்கு ஒட்டுக்குழுக்களாக செயற்படவில்லை. ஆனாலும் அவர்கள் கூட வடமாகாண சபையில் போட்டியிட முடியாத நிலையேற்பட்டது. அதற்கு இக்கட்சி தொடர்பாக ஊடகங்களும் பெரியளவில் வெளிப்படுத்தவில்லை. ஆனாலும் அவர்களுடைய அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியிலுள்ளவர்கள் குறிப்பாக மாவை சேனாதிராஜா, சுமந்திரன், சம்பந்தன், அரியநேந்திரன், பொன்.செல்வராசா, சரவணபவான், சிவஞானம் சிறிதரன், சி.வி.கே.சிவஞானம் போன்றோர்கள் தாம் தமிழரசுக்கட்சியின் வழியே வந்தவர்கள் என்ற பெருமையுடன் இருப்பதுடன் அதனை அவர்கள் பல இடங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளனர். வடமாகாணசபைத்தேர்தலிலும் கூட ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் விடுதலைக்கூட்டணி இந்த நான்கு கட்சிகளும் முழுமூச்சாக தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டன. ஆயுதக்கட்சிகளுடன் நாம் சகவாசம் வைத்துக்கொள்வது ஆகாதென்று விக்னேஸ்வரன் அவர்கள் கூறவில்லை. அவ்வாறு கூறியிருந்தால் இக்கட்சிகள் தனித்துப்போட்டியிட வாய்ப்புக்கள் இருந்திருக்கலாம் என தற்பொழுது கூறப்படுகின்றது. பல்வேறு காரணங்களைக்காட்டி எதிர்ப்பினை தெரிவித்திருந்த ஆனந்தசங்கரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டு வடமாகாணசபையில் போட்டியிட்டது வரவேற்கத்தக்கது. அவரை சபை குழப்பி என பல கட்சிகளும் தெரிவித்திருந்தன.

12ஆம் பக்கம் பார்க்க...

# முப்பது ஆண்டு காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள்

யாழ்.கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவு நிகழ்வில் சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் 'ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணையும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்றதலைப்பில்நினைவுப்பேருரையாற்றினார். அதன் முழு விபரம் வருமாறு. சட்டத்துறையிலும் அரசியலிலும் பிரகாசித்து மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்திய பல தலைவர்களை இந்த நாடு கண்டிருக்கிறது. சட்டத்தில் பாண்டித்தியம் பெற்று தங்கள் வாதத்திறமையாலும், வாக்குவன்மையாலும் மக்களைக் கவர்ந்து புகழின் உச்சிக்குச் சென்ற எண்ணற்ற தலைவர்கள் இந்நாட்டில் உருவாகியிருக்கிறார்கள்.

எனினும் அவர்கள் மத்தியில் தனித்துவமான தனது குணாதிசயங்களாலும் மற்றைய அரசியல்வாதிகள் சொல்ல வேண்டியதை சொல்லத்திராணியற்றிருந்த போது, தான் பிரதிநிதித்துவம் செய்த மக்களுக்காகத் துணிவுடன் செயற்பட்ட குமார் பொன்னம்பலம் தமிழ் மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றவர். குமார் பொன்னம்பலம் நினைத்திருந்தால், தான் சார்ந்திருந்த மேல் தட்டுச் சமுதாயத்துடன் சமரசம் செய்து நல்லவர் என்ற பெயரினைப் பெற்று தற்பொழுதும் செல்வாக்காக இருந்திருக்கலாம். கண்முன்னால் நடைபெறும் அநியாயங்களையும், அநீதிகளையும்பொறுக்க முடியாமல் அதிகாரத்தில் உள்ளவர்களின் மனச்சாட்சி உறுத்தும் வண்ணம் பேசிய படியினாலும், எழுதியபடியினாலும் அவருடைய வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்தது அதிகார வர்க்கம். அவரது மறைவுக்கு தனது பத்திரிகையில் அனுதாபக் கட்டுரை எழுதிய பத்திரிகையாசிரியர் லசந்த விக்கிரமதுங்க, 'Kumar would have been a colour ful figure and a forth right speaker in Parliament. death has deprived the people of a dependable leader'. **குமார் தனது மக்களை பிரதிநிதித்துவப்படுத்த விரும்பியபோது தமிழ்த் தலைமைகள் அவருக்குத் துணை கொடுக்கவில்லை. தமிழ் மக்கள் அவரைத் தேர்ந்தெடுக்கத் தயாரான போது குமார் நம்மிடையே இல்லை.** தமிழ் மக்கள் தவறவிட்ட, அதுகுறித்துகாலமெல்லாம் வேதனைப்படவேண்டிய எண்ணற்ற அரசியல் சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

சர்வதேசசட்டத்தரணிகள்சங்கத்தின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான டெஸ்மன் பெர்னாண்டோவின் கூற்றுப்படி 'In my view and I speak as a non – Tamil, he was the greatest Tamil political leader of our times – dedicated, courageous and out – spoken'. கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக நடந்த யுத்தத்திலும் அதற்கு முந்தைய காலங்களிலும் இலங்கைவாழ்தமிழ்மக்கள் தங்களுக்குஉரிய தீர்வு கிடைக்கும் என்றே நம்பி வாழ்ந்தார்கள். பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலந்தொட்டுஅரசபணிகளிலும், அரசியலிலும், கல்வித்துறையிலும், தொழில்துறையிலும் மற்றைய விவகாரங்களிலும் ஒருதலைப்பட்சமாக பாரபட்சத்தையே சந்தித்த மக்கள், அரசியல் வட்டமேசைப் பேச்சுவார்த்தைகளும் பலனளிக்காத நிலையில் ஆயுதப் போராட்டத்தை நாடினார்கள். ஆயுதப்போராட்டம் பலமான நிலையில் இருக்கும் வரை மக்களின் எதிர்பார்ப்புகளும் நிலைத்தன. பலமான தளத்தில் நின்று பேரம் பேசும் வாய்ப்பு இருந்தது.

அந்த நிலைமையிலும் கூட பெரும்பான்மையினரின் தலைமைகளும், சிங்கள பௌத்த நிலையியல்வாதிகளும் மற்றைய இனங்களுடன் சமரசம் செய்யத்தயாராக இருக்கவில்லை. சர்வதேச சமூகமும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவை இழக்க விரும்பவில்லை. இந்நிலையில் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற போது தமிழ் மக்கள் தாங்கள் அதலபாதாளத்தில் இருப்பதை உணர்ந்தார்கள். பல்லாயிரக்கணக்கான சாமானிய மக்களின் உயிர்கள் மரணிக்கப்பட்டன. இருந்தவீடுகள், நிலங்களை இழந்து, வாழ்வாதாரங்களைப் பறிகொடுத்து, உற்றார் உறவினர்களைக் கண்முன்னாலேயே இழந்து நிர்க்கதிக்குள்ளானார்கள். மிகவும் கபடமாகவும், தந்திரமாகவும் சர்வதேச தொண்டு ஸ்தாபனங்களையும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்களையும், ஊடகவியலாளர்களையும் யுத்தப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றி சாட்சிகளற்ற யுத்தத்தினை (War without witnesses) நிகழ்த்தி, வரலாறு கண்டிராத கொடுமைகளையும், போர்க்குற்றங்களையும், இனப்படுகொலையையும் அரங்கேற்றியது இலங்கை அரசு. அண்டை நாடான இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் பார்த்துக்கொண்டிருந்தது. எஞ்சியிருந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் விலங்குகளைப் போல் முட்கம்பிகளின் பின் அடைக்கப்பட்டு சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கு உள்ளானார்கள். வவுனியாவுக்கு அண்மையிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு அகதி முகாம்கள் என்ற போர்வையில் இம்மக்களை அங்கு வருடக்கணக்காக அமர்த்திவைக்க திட்டங்கள் ஏற்கனவே தீட்டப்பட்டிருந்தன.

வன்னியில் வாழ்ந்த மக்கள் அனைவரையும் அங்கு இருந்து வெளியேற்றிய பின்னர் மக்கள் நடமாட்டமற்றிருந்த வன்னி நிலப்பரப்பில் பாரிய குண்டுவீச்சுக்கள், ஆகாயமார்க்கத் தாக்குதல்கள், செல்வீச்சுக்கள், கொத்துக்குண்டுகள், இரசாயன குண்டுவீச்சுக்கள் என்பவற்றால் அழித்ததுபோலஎஞ்சிய குடியிருப்புக்களையும், வீடுகளையும், மனைகளையும் திட்டமிட்டு அழித்தது இலங்கை இராணுவம். மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட குடிசனங்கள் வாழ்ந்திருந்த, செழிப்பும், மண்வளமும் மிக்க வன்னி நிலப்பரப்பில் குடிசனங்கள் வாழ்ந்திருந்ததற்கான எதுவித அடையாளங்களும் அழிக்கப்படுவதற்கான செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

கனரக வாகனங்கள், புல்டோசர்கள் போன்ற அசுர இயந்திரங்கள் மூலம் மக்கள் செறிவின் அடையாளங்கள் தரைமட்டமாக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்ட சம்பவம்நடந்தேறியது. அதேபூமியில்இராணுவ முகாம்களை அமைத்து இராணுவத்தினர் உத்தியோக இருப்பிடங்களையும், அவர்கள் குடும்பத்தினரைக் குடியேற்றுவதற்காக பின்னர் அவர்களுடைய பிள்ளைகள், சிறுவர்களுக்கான பாடசாலைகள், அலுவலகங்கள், கிராம, நகர குடியிருப்புகள் என்பவற்றையும் உருவாக்கி மக்கள் பரம்பலை மாற்றுவதற்கான திட்டங்கள் செயலாக்கம் பெற்றன. புத்தர் சிலைகள் காணுமிடமெல்லாம் அமைக்கப்பெற்றன. அனுராதபுரத்தில் உள்ள ஒரு பௌத்த ஆலயத்தில் ஆயிரக்கணக்கான புத்தர் சிலைகளும், விக்கிரகங்களும் வன்னிப்பிரதேசத்தின் பரவல இடங்களில் பிரதிஷ்டை பண்ணுவதற்காக கொண்டுவரப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டன. இந்நிலையில்தான் பெரும்பான்மையினவாதத்தின் உண்மை சொரூபம் வெளிப்பட்டது. ஆடிப்பாடிக்களியாட்டம் நடத்தி வீதிகளில் பாற்சோறு சமைத்து விநியோகித்து மகிழ்ந்ததுடன் நின்றுவிடவில்லை அவர்கள். தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளையும், நலிவுகளையும், துயரங்களையும், அவலங்களையும் கண்டுகளிப்பதற்காக வடபகுதிக்கு தென்பகுதியிலிருந்து சுற்றுலாப்பயணிகள் செல்லத்தொடங்கினர். பாதுகாப்பு பிரிவினரும், அரசாங்கமும் ஒன்றுசேர்ந்து இப்போக்குவரத்து வசதிகளை செய்து, கைச்செலவுக்கும் பணம் கொடுத்து இச்சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து கொடுத்தார்கள். வெற்றிக்களிப்புக்கும், எக்காளத்துக்கும் எல்லையே இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் அகதி முகாம்களிலும் நிம்மதியாக வாழவிடப்படவில்லை.

விசாரணை, விளக்கம் என்ற பெயரில் கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் ஒருபுறம், நோய், பசி, பட்டினியால் உயிர்நீத்தோர் ஒருபுறம், பொலிஸ் - இராணுவ பாலியல் கொடுமைகளுக்கும், துஸ்பிரயோகங்களுக்கும் உள்ளாகிச் சருகாகிப்போன யுவதிகள், சிறுவர்கள் ஒருபுறம். சில ஸ்தாபனங்கள், சட்டத்தரணிகள் மூலம் மனித உரிமை



வழக்குகள் உயர் நீதிமன்றில் தொடரப்பட்டன. சட்டரீதியற்ற, சட்டத்துக்கு புறம்பான வகையில் பெருந்தொகையிலான மக்கள் தடுத்துவைக்கப்பட்டதை எடுத்துக்காட்டிய இவ்வழக்குகள் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டன.

எதுவித சட்டரீதியான காரணமுமின்றி மக்களைத் தடுப்புக்காவலில் வைப்பதற்கு பாதுகாப்பு தரப்பினருக்கு உரிமையிருக்கிறது என்ற ரீதியில் தீர்ப்பு வழங்கியது உயர் நீதிமன்றம். இந்நிலையில் தான் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளும், இன்னல்களும், சித்திரவதைகளும் இன ஒழிப்புக் கைங்காரியங்களும் வெளியுலகத்துக்கு மெல்லக் கசியத்தொடங்கின. இதன் விளைவாக ஐ.நா செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கை சர்வதேச சமூகத்தை அதிர்ச்சியில் உறைய வைத்தது. உலகளவில் அங்கீகாரம் பெற்ற சட்ட வல்லுனர்கள், நீதித்துறை, புலனாய்வுத்துறையில் அனுபவம் வாய்ந்த பாரபட்சமற்ற நடுநிலையாளர்கள் அடங்கிய இக்குழு, போரின் இறுதி நாட்களில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், அக்கிரமங்களையும் விபரமாக வெளியிட்டது.

சர்வதேசத்தின் மனச்சாட்சி நெருடப்பட்டதாலேற்பட்ட விளைவுதான், அதன் பின்னர் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் ஜெனீவா அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாகும். இலங்கை அரசாங்கம் தனது சர்வ வல்லமைகளையும் உபயோகித்து இத்தீர்மானங்களை மழுங்கடிக்கும் நோக்கில் சகல இராஜதந்திர நகர்வுகளையும், தந்திரோபாயங்களையும், கபட யுக்திகளையும் கையாண்ட பொழுதும், இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இலங்கை சார்பாக பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்ட போதும் 2014 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையிலும், உலகெங்கிலும் வாழ்தமிழ்மக்களுக்கு ஓரளவான ஆறுதலைத் அளித்தது. இத்தீர்மானத்தின் 10ஆவது பிரிவு முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் இலங்கை இராணுவத்தினால் புரிந்ததாக கூறப்படும் மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் முகமாக ஒரு சர்வதேசப் பொறிமுறையை உருவாக்கும் அதிகாரத்தை அளித்தது.

எனினும் இதில் தமிழ் மக்களுக்கு ஒரு சங்கடம் உருவாகியது. அதாவது மனித உரிமை மீறல்கள் என்னும் பதம், இதுவரை இலங்கை அரசாங்கத்தினாலும், இராணுவத்தினராலும் 30 ஆண்டுகளுக்கு மேலாக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், இன அழிப்பு, இன சுத்திகரிப்பு 'war crimes, eth nic cleansing, genocide' போன்ற குற்றங்களை விசாரிக்கும் ஆணைக்குப் பதிலாக சாதாரண மனித உரிமை மீறல்களுக்கு மாத்திரமே தீர்மானம் மட்டுப்படுத்தப்பட்டதாக கருத்து நிலவியது. இதன் எதிரொலியாக தமிழகத்திலுள்ள தமிழர் செயற்பாட்டுக் குழுக்களும், புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் தமது கடுமையான அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

மானிட நெறிகளுக்கு அப்பாற்பட்டு இலங்கை இராணுவத்தினர் ஆடிய வெறியாட்டங்கள் சம்பந்தமாக மிக மென்மையான எதிர்கொள்ளலையே (response) ஐ.நா மேற்கொண்டிருப்பதாக கருத்து நிலவியது. இதற்கு பதிலளிக்குமுகமாக, இத்தீர்மானத்தின் அணிந்துரையிலேயே (preamble) பதில் அடங்கி உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது, மனிதாபிமானச் சட்டத்தின் (umanitarian Law) ஏற்பாடுகளை மீறிய இராணுவச்செயற்பாடுளை விசாரிக்கும் ஆணையை இத்தீர்மானம் உள்ளடக்கியிருப்பது பல சட்ட அறிஞர்களினால் அவதானிக்கப்பட்டதுடன், யுத்தத்தின் இறுதிக்கட்டத்திலும், அதற்கு முன்னரும், அதன் பின்னரும் பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், யுத்தத்தைக் கைவிட்டு நிராயுத பாணிகளான போராளிகள், சரணடைந்த போராளிகள் ஆகியவர்களை படுகொலை செய்தது.

சித்திரவதை செய்து துன்புறுத்தியது, திட்டமிட்ட முறையில் ஒரு நிலப்பகுதியில் குடி கொண்ட மக்களுக்கு உணவு, மருந்துப் பொருட்கள், மனிதாபிமான உதவி கள் என்பவற்றை தடுத்து நிறுத்தியது, மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைத்து, பாலியல் வல்லுறவு, துஸ்பிரயோகம் என்பவற்றை இராணுவ தந்திரோபாயங்களாக பாவித்தது (rape as a weapon of war), மனிதர் வாழும் நிலப்பகுதிகளையும், குடியிருப்புகளையும், வாழ்வாதாரங்களையும் சிதைத்ததன் மூலம் அமைப்புரீதியான இனச்சுத்திகரிப்பினை (structural geno cide) மேற்கொண்டது. ஆகியவற்றுக்கான விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறிமுறை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் கொண்டிருப்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. 1949ம் ஆண்டின் ஜெனிவா உடன்படிக்கையின் படியும் 1977ம் ஆண்டின் கடப்பாடின் படியும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் போரின் போதும் போரை ஒத்த சூழ்நிலையிலும் ( war and war – like situation) இயை புடையதாக ஆகின்றன.

ஆயுதப் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்டிருப்பதனால், போரின் போது சட்டங்கள் மௌனிக்கின்றன எனக் கூறுவது தவறு. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் போரின் பொழுதும், சாதாரண காலங்களிலும் அமுலில் இருக்க வேண்டும். மனிதாபிமானச் சட்டங்கள் போரின் போதும் போர்க்காலச் சூழலிலும் பாவனையிலிருக்கும் சட்டங்களாகும். ஹேக் விதிகளின் 25வது ஷரத்தின் படி நகரங்கள், கிராமங்கள், கட்டடங்கள், குடியிருப்புகள் மீது தாக்குதலோ, குண்டு வீச்சுகளோ எந்த வகையிலும் செய்யலாகாது. போரில் ஈடுபடும் எந்த ஒரு தரப்பும் குடிமக்களையோ, குடி மக்களுடைய மக்களுக்குரிய சாதனங்களையோ (civilians or civilian objects)தாக்குதலில்இருந்துதவிர்ப்பதற்கான எல்லாவித முன்னேற்பாடுகளையும் செய்திருக்கவேண்டும்.'

12ஆம் பக்கம் பார்க்க...

# மாவீரர் நினைவேந்தல்களும் தடம்மாறா இனவாத கொள்கையும்

இலங்கை 1948 பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரமடைந்த தொடக்கம் தனது பெரும்பான்மை என்ற இனவாத கொள்கையை தமிழர்கள் மீது திணிக்க தொடங்கியது சுதந்திரத்திற்கு முன்னர் போர்த்துகேயர் ஒல்லாந்தார் ஆங்கிலேயர் என வந்த ஆக்கிரமிப்பாளர்களுடன் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய சிங்கள தலைவர்களுடன் அந்நாளில் தமிழர்களும் இணைந்து போராடினார்கள் பிரித்தானியர்களுக்கு எதிரான போரில் தமது மக்களை காக்க போராடிய கெப்படிபொல திசாவ மேற்படி வீரர்களை பிரித்தானிய அரசு துரோகிகள் என்றும் அவர்களை தீவிரவாதிகள் என்றும் சிரச்சேதம் செய்தது இன்று அவர்களை சிங்கள மக்கள் தமிழ் மக்கள் தியாகிகள் என்றும் அவர்களது பெயர்களில் கிராமங்கள் உள்ளதையும் சிங்களப் பௌத்த தலைமைகள் மறுக்க முடியாது ஏன் அன்று அந்த சிங்கள வீரர்கள் போரிட்டார்கள் தமது இனத்தின் மீது அடக்குமுறையும் தாம் வாழும் மண்ணை ஆக்கிரமிப்பு செய்வதையும் தமது வளங்கள் சுரண்டப்படுவதையும் தமது மதத்தை தமது கலாச்சாரத்தை பிரித்தானியர் அழிப்பதை எண்ணி வெகுண்டெழுந்து போராடினார் எமது மண்ணுக்காகவும் எமது மக்களுக்காகவும் போராடிய அவர்களை பிரித்தானிய அரசு பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியது அவர்களை படு கொலை செய்தது பிரித்தானியாவின் கண்களில் அன்று அது பயங்கரவாதமாக தோன்றியது.

ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் அவர்கள் கதாநாயகர்கள் ஆகினர். இன்றும் அவர்கள் துதிக்கப்பட்டு வருகின்றனர்கள். அன்று சுதந்திரத்திற்காக போராடிய சிங்களத் தலைவர்களை பிரித்தானிய அரசு கைது செய்தபொழுது தமிழ் தலைவர்கள் போராடி பிரித்தானிய மகாராணியிடம் சென்று கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களை மீட்டெடுத்ததும் தமிழ் தலைவரான சேர்.பொன் இராமநாதன் அவர்களை பல்லாக்கில் வைத்து தூக்கி வந்தமையும் இன்று பாராளுமன்ற கட்டிடத்தின் முன் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் சிலை வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தி வருவதையும் நாம் கண்ணால் காண்கின்றோம். இவ்வாறு ஓர் நாட்டில் வாழும் இனங்கள் அடக்கப்பட்டு அவர்களின் சுதந்திரம் மறுக்கப்பட்ட பொழுது அச்சுதந்திரத்தை பெற அகிம்சைவழி ஆயுத வழி என சிங்கள தமிழ்த் தலைவர்கள் அன்று போராடியது இன்றுள்ள தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கு சரியென்று படுமானால் 1948 இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் எந்த இனம் அடக்கப்படுதோ? எந்த மக்கள் ஒடுக்கப்படுகின்றார்களோ? எந்த இனத்தின் மதம் அழிக்கப்படுகின்றதோ? அன்று அதற்கு விடிவு கிடைக்க வேண்டும் என்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்று விரும்பி போராடிய சிங்கள பெரும்பான்மைஇனம்சுதந்திரம்பெற்றவுடன் பிரித்தானியர் எவ்வாறு தம்மை அடக்கி ஆண்டவர்களோ! அதைவிட பல மடங்கு குரோதத்துடனும் மேலாதிக்க வெறியுடனும் சிறுபான்மையினமான தமிழர்களை அடக்கி ஒடுக்க முனைந்தனர்.



இதற்கு ஓர் முடிவு இல்லையா 58, 68, 78 என தமிழ் மக்களை அடித்து அவர்களின் சொத்துக்களை சூறையாடி அவர்களின் கல்வியை சிதைத்து அவர்களுடைய கலாச்சார விழுமியங்களை அழித்து தங்களின் கோரப்பற்களை காட்டும் பொழுது தமிழர்கள் அகிம்சை வழியாக பல போராட்டங்களை நடத்தினர். ஆனால் சிங்கள பெரும்பான்மை இனம் எள்ளி நகையாடி அதனை தன் காலால் மிதித்து சந்தோசமடைந்தது. தந்தை செல்வநாயகம் அமிர்தலிங்கம் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் யோகேஸ்வரன் ஜி.ஜி. பொன்னம்பலம் என எல்லோரும் அகிம்சை வழியில் போராடிப்பார்த்தார்கள் அவர்களிடம் எங்களை தனியாக வாழவிடுங்கள் எங்களை அமைதியாக வாழவிடுங்கள் எங்களின் கலாச்சார விழுமியங்களை அழிக்காதீர்கள். எங்களின் ஒரே சொத்தான கல்வியை தரப்படுத்தல் முறையில் அழிக்காதீர்கள் என அகிம்சை ரீதியாக கேட்டார்கள். கெஞ்சினார்கள் அழுது புலம்பி கேட்டார்கள்

ஆனால் சிங்களத் தலைமைகளோ நீங்கள் அடிமைகள் உங்களுக்கு நாடு தேவையில்லை உங்களுக்கு கலாச்சாரம் தேவையில்லை உங்களுக்கு ஏன் கல்வி என எள்ளி நகையாடியது அன்று சிங்களத் தலைமைகளை பிரித்தானிய மகாராணியிடம் சென்று போராடி எடுத்தது ஆயுதம் கொண்டு அல்ல தான் படித்த கல்வி விழுமியங்களை வைத்தும் தனது ஆங்கிலப் புலமையால் போராடி பிரித்தானிய மாகாராணியிடம் இருந்து சிங்களத் தலைவர்களை மீட்டார் சேர்.பொன்.இராமநாதன் பிரித்தானிய அரசால் வழங்கப்பட்ட பட்டமே சேர் அன்று அவரது கல்விக்கும் அவரது புலமைக்கும் பிரித்தானியா அரசு மதிப்பழித்தது ஆனால் அதை மறந்து அந்த கல்வியே தமிழன் பலம் என எண்ணி தரப்படுத்தலை உருவாக்கி அன்று தமிழ் பிள்ளைகளின் மனதில் விரக்தியை உருவாக்கி அவர்களை ஆயுதம் ஏந்த தூண்டியது யார்? இன்று பயங்கரவாதிகள் என்று நீங்கள் சொல்லும் அவர்கள் ஏன் பயங்கரவாதிகள் ஆனார்கள். நீங்கள சிந்திக்க மாட்டீர்கள் பயங்கரவாதிகளை உருவாக்கிய பயங்கரவாதிகள் நீங்கள் தனது இனத்தின் அவல நிலை கண்டு தனது இனத்தின் கல்வி நிலை கண்டு 58,68,78 என நீங்கள் அடித்த கொன்று எரித்து சூறையாடி நீங்கள் போட்ட ரூத்திர தாண்டவம் அப்பாவியாக வாழ்ந்த இனத்து இளைஞர்கள் பயங்கரவாதிகளாக்கியது உங்களுக்கு அன்று பிரித்தானிய பயங்கரவாதத்துக்கு எதிராக நீங்கள் எவ்வாறு வெகுண்டெழுந்து போராடினீர்களோ அடக்குமுறை ஒடுக்குமுறையும் உங்கள் கழுத்தை நெரிக்கும் பொழுது இனியும் பொறுக்க முடியாது அகிம்சை வழியில் கேட்டு ஒன்றும் பயனில்லை என நீங்கள் போராடினீர்கள் அதேபோல உங்களின் அடக்குமுறை ஒடுக்குமுறைகளை கண்டு தமிழினம் இனி வேறு வழியில்லை உங்களுக்கு அகிம்சை வழியில் எத்தனையோ தடவைகள் நாம் பேசிப்பார்த்து விட்டோம்.

ஆனால் எம் இனத்தை அழித்தொழிப்பதே உங்களின் சித்தந்தமானது எம் இனத்தைகாக்க தற்காப்பு ரீதியாக போராட முடிவெடுத்தது தமிழினம் ஆனால் அதை ஒடுக்க நீங்கள் சுட்டிய பட்டம் பயங்கரவாதிகள் பயங்கரவாத தடைச்சட்டம் என இரும்பு கரம்கொண்டு அடக்க தொடங்கினீர்கள் 83 யூலை கலவரம் போராட தொடங்கிய சிறு குழுவை பாரிய இராணுவ கட்டமைப்பாக கொண்டு சென்று விட்டது யார் நீங்கள் கொழும்பில் 83 யூலைக் கலவரம் என தொடங்கி காடையர்களை இறக்கி நீங்கள் செய்த படுகொலைகள் ஆயுதம் ஏதுமின்றி கையேறு நிலையில் கொழும்பில் இருந்தஅப்பாவி தமிழ் மக்களை கொன்று குவித்தது மட்டு மல்லாமல் பெண்களை சிதைத்தீர்கள் தமிழர் கடைகளை தேடி தேடி எரித்தீர்கள் இது பயங்கரவாதம்



இல்லையா? இதில் ஈடுபட்டவர்கள் தியாகிகளா? நீங்கள் மூட்டியதீகொழுத்துவிட்டு எரிந்தது தமிழர்கள் பலம் அதிகரித்தது அன்று நீங்கள் சிறு குழுவாக இருந்த அமைப்பை ஒருக்குவோம் என நீங்கள் மேற்கொண்ட முட்டாள்தனமான செயற்பாடு அக்குழுமீது மக்கள் திரும்ப காரணமாயிற்று ஓர் இனம் அடக்கப்படும் பொழுது அந்த அடக்குதலை முறியடிக்க வழி ஒன்று தென்படுமாயின் அவ்வழியிலேயே அந்த அடக்கப்படும் இனம் பயணிக்கத் தொடங்கும் அது தான் 83 இல் நடந்தது நீங்கள் தமிழ் மக்களை அழிக்கின்றோம் அவர்களை அடக்கின்றோம் என நீங்கள் புரிந்த செயல் சுமார் 30 வருடங்களாக விஸ்வரூபம் எடுத்து நின்றது. இதில் யார் வென்றார்கள் இதில் யார் பாதிக்கப்பட்டார்கள் ஒட்டு மொத்த நாடே சுடுகாடாகியது. அப்பாவி சிங்கள கிராமத்து பிள்ளைகள் அநியாயமாகவும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் விதாண்டவாத செயற்பாட்டால் உயிரிழந்து போயினர் எத்தனை சிங்கள மக்கள் அநியாயமாக உயிரிழந்தன் தமிழினம் வேதனைப்படுகின்றது. ஆனால் தென்னிலங்கை அரசியல் அரசியல் தலைமைகளே ஓர் இனத்தின் விடியபுரிந்த செயல் சுமார் 30 வருடங்களாக விஸ்வரூபம் எடுத்து நின்றது. இதில் யார் வென்றார்கள் இதில் யார் பாதிக்கப்பட்டார்கள் ஒட்டு மொத்த நாடே சுடுகாடாகியது. அப்பாவி சிங்கள கிராமத்து பிள்ளைகள் அநியாயமாகவும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் விதாண்டவாத செயற்பாட்டால் உயிரிழந்து போயினர் எத்தனை சிங்கள மக்கள் அநியாயமாக உயிரிழந்தன்ர் தமிழினம் வேதனைப்படுகின்றது.

ஆனால் தென்னிலங்கை அரசியல் தலைமைகளோ ஓர் இனத்தின் விடியலுக்காக போராடியவர்களையும் அப்பாவிமக்களையும் கொன்று குவித்தது எது பயங்கரவாதம் தமிழ் மக்களின் தற்காப்பு போரை நிரந்தர யுத்தமாக மாற்றியது நீங்கள் தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்கவதாக கூறி தமிழ் பகுதிகளில் செய்த படுகொலைகளை ஏராளம் எத்தனை அப்பாவி இளைஞர்களை மண்ணுக்குள் மூடி மறைந்துள்ளீர்கள் எத்தனை இளம் அப்பாவி பெண்களை சீரழித்துள்ளீர்கள். வல்வெட்டித்துறை தொடக்கம் பொத்துவில் வரை நீங்கள் புரிந்த படுகொலைகள் எண்ணிலடங்க குறிப்பிட்டு சொல்லப்போனால் வல்வை படுகொலை செம்மனிபடுகொலை மண்டை தீவு படுகொலை மன்னார் உயிலங்குளம் படுகொலை கொக்கட்டிசோலை படுகொலை சத்துறுக்கொண்டான் படுகொலை மூதூர் படுகொலை கிரான்படுகொலை இறுதியாக முள்ளிவாய்க்கால் படுகொலை என செய்தபடுகொலைகள் சாட்சியமற்றுபோனது.

உங்களின் மேலான்மையும் பேரினவாத கொள்கையாலும் உங்கள் இனத்தின் அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டமையும் இக்காலப்பகுதியில் இடம்பெற்றது அனுராதபுரம் புதிய நகர் தாக்குதல் தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பு இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பு அரந்தலாவ பிக்குமார் படுகொலை தலதாமாளிகைதாக்குதல் என இடம்பெற்றதில் சில இது நீங்கள் விதைத்ததற்கு ஆன அறுவடை என்று தான் சொல்ல முடியும் தமிழினம் இன்று சகலத்தையும் இழந்து மீண்டும் நிர்க்தியாகி நிற்கும் நிலையில் தென்னிலங்கை தலைமைகள் மீண்டும் ஏதிலிகளாக உள்ள தமிழ் இனத்தின் விடிவுக்காக போராடிய தமது உறவுகளை அஞ்சலி செலுத்த தடை விதித்துள்ளது. 1960 1988 ஆண்டு காலப்பகுதியில் தென்னிலங்கை அரசை எதிர்த்து போராடிய ஜே.வி.பி சிங்கள இளைஞர்களை இரும்பு கரம் கொண்டு ஒடுக்கியது ஜே.வி.பி அமைப்பினரால் அக்காலத்தில் பல அப்பாவி சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். பல அரசியல் தலைவர்களும் கொல்லப்பட்டனர். பல பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர். 1990ஆம் ஆண்டளவில் அவ் இயக்கம் தலைமை அழிக்கப்பட்டது. அதன் தலைவர் றோகன விஜேவீரா கொல்லப்பட்டார். ஆனால் தன் இனத்தை அழித்த ஜே.வி.பியினர் இன்று அரசியல் அமைப்பாக மாறி செயற்பட தென்னிலங்கை அரசு அனுமதி வழங்கி அவர்களின் போராளிகளை தினத்தை கொண்டாட அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் தமிழ் இனத்தின் விடிவுக்காக போராடிய உறவுகளை அஞ்சலி செலுத்த தடைவிதித்தமையானது பெரும்பான்மை சிங்களத் தலைமைகள் தமிழர்களின் மீதான தமது எண்ணத்தில் அல்லது அவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதையிட்டோ கவலைப்படுவதாக தெரியவில்லை. தமிழ் மக்களின் மனங்களில் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மீண்டும் ஓர் இன வன்மத்தையும் வெறுப்பையும் தோற்றுவிக்கும் இனியொரு ஆயுதப்போராட்டம் உருவாகுவதை தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள்.

கடந்த 30 ஆண்டுகளாக அவர்கள் செலுத்திய விலைகள் போதும் அவர்கள் சிந்திய கண்ணீர்கள் போதும் அவர்கள் இழந்த சொத்துக்கள் போதும் இனிமேல் இழக்க ஒன்றுமில்லை. அவர்கள் கேட்பது இப்பொழுது ஒன்று மட்டும் தான் தங்களை நிம்மதியாக வாழவிட்டால் போதும் தமக்காக உயிர்நீத்த உறவுகளை பூசிக்க அனுமதித்தால் போதும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமது இனவாத கொள்கையில் இருந்து தடம்மாறி வருவார்களாக இருந்தால் நாடு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கும் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

தாயகத்தான்

# மாவீரர் நாள் -2020

ஆய்வாளர்: நிலாந்தன்

நினைவுகூர்தல் பொதுவாக இரண்டு வகைப்படும் முதலாவது தனிப்பட்ட நினைவு கூர்தல். இரண்டாவது பொதுநினைவுகூர்தல். தனிப்பட்ட நினைவு கூர்தல் எனப்படுவது ஒருவர் அல்லது ஒரு குடும்பம் இறந்து போனவரை தனிப்பட்ட முறையில் நினைவு கூர்வது. அது தனிநபர் உரிமை தொடர்பானது. அதற்கு அரசியல் பரிமாணம் ஒப்பீட்டளவில் குறைவு. பண்பாட்டு பரிமாணமும் உளவியல் பரிமாணமும் தான் அதிகம். ஆனால் பொது நினைவு கூர்தல் என்பது முழுக்க முழுக்க அரசியல் பரிமாணத்தைக் கொண்டது. பண்பாட்டு உளவியல் பரிமாணத்தைக் கொண்டது. அது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமை சம்பந்தப்பட்டது.

ஒரு பொது நினைவு கூர்தலின் போது ஒரு பொது இடத்தில் மக்கள் ஒன்று திரண்டு இறந்தவர்களை நினைவு கூறுகின்றார்கள். இதனால் கூட்டுத் துக்கமானது கூட்டு ஆக்க சக்தியாக அரசியல் செயலாக்க விசையாக மாற்றப்படுகிறது. அதேசமயம் துக்கம் கூட்டாக வெளிப்படுகையில் அங்கே ஒரு குணமாக்கற் செய்முறையும் உண்டு. அதாவது உளவியல் ரீதியாக அக் கூட்டுத்துக்கம் குணமாக்கப்படுகிறது. அது ஓர் ஆற்றுப்படுத்தல் செய்முறை.

ஆனால் அரசாங்கம் கூட்டு நினைவு கூறுதலைத் தடை செய்திருக்கிறது. ராணுவத் தளபதி சவேந்திர சில்வா தமிழ் மக்கள் தங்கள் தங்கள் வீடுகளில் தனிப்பட்ட முறையில் நினைவு கூறலாம் என்று கூறிவிட்டார். ஆனால் பொது இடங்களில் கூடி அதை ஓர் அரசியல் நிகழ்வவாக அனுஷ்டிப்பதற்கு தடை உண்டு என்றும் கூறினார். அரசாங்கத்தின் உபகரணங்களான நீதிமன்றமும் பொலீசும் அதை உறுதிப்படுத்தின. பயங்கரவாதத் தடைச்சட்டம் கொவிட்-19 தனிமைப்படுத்தல் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களின் அடிப்படையில் பொது இடங்களில் கூடி நினைவு கூற முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

இப்படிப்பட்டதோர் அரசியல் உளவியல் மருத்துவச் சூழலுக்குள் தமிழ் கட்சிகள் நினைவுகூர்தலை எவ்வாறு ஒழுங்குபடுத்தின? அவர்கள் வழமை போல துயிலும் இல்லங்களைத் துப்பரவாக்கினார்கள். பொலீஸ்காரர்களோடு வாக்குவாதப்பட்டார்கள். அரசாங்கத்திடம் வேண்டு கோள் விடுத்தார்கள். நீதிமன்றங்களுக்கு போனார்கள். வழக்குப் போட்டார்கள். முடிவில் நினைவுகூர்வதற்கு சட்டப்படி தடை என்று தீர்ப்பை வாங்கினார்கள். அதன் பின் மக்கள் அவரவர் தங்களுடைய வீடுகளில் இருந்தபடி விளக்குகளை ஏற்றி நினைவு கூறலாம் என்று அறிக்கை விட்டார்கள்.

அவர்கள் அறிக்கை விட்டார்களோ இல்லையோ சனங்கள் வீடுகளில் விளகேற்றினார்கள். ஆனால் வெளிப்படையாக தங்கள் வீட்டின் மதிற் சுவரில் ஒரு சுட்டியை எத்தனைபேர் ஏற்றி வைத்தார்கள் ? அல்லது பொது இடங்களில் ஒரு சுடரை ஏற்றி அதை அனுஷ்டித்தவர்கள் எத்தனை பேர்?அல்லது மணிகளை ஒலித்து அஞ்சலித்த ஆலயங்கள் எத்தனை? கடந்த பத்தாண்டுகளாக துணிந்து செயற்பட்ட யாழ் பல்கலைக்கழகம் இந்த முறை ஒதுக்கி விட்டதா?

இது கடந்த மே18ன் போதும் அவதானிக்கப்பட்டது. கொவிட்-19 சூழலுக்குள் மே18ஐ மக்கள் மயப்படுத்துவதில் இருக்கக்கூடிய இடர்களை கவனத்திலெடுத்து குறிப்பிட்ட நேரத்தில் எல்லா ஆலயங்களிலும் மணிகளை ஒலிக்கக் கேட்பதென்றும் வீடுகளில் சுடரேற்றுமாறு கேட்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது. யாழ் சர்வமத சபை அது தொடர்பில் அறிக்கையும் விட்டது. ஆனால் எத்தனை ஆலயங்களில் மணி ஒலிக்கப்பட்டது? எத்தனை வீடுகளில் சுடர் ஏற்றப்பட்டது? அதேசமயம் திலீபன் நினைவு நாளை முன்னிட்டு கடைகளை அடைக்குமாறு தமிழ் கட்சிகளின் கூட்டு கேட்ட போது முஸ்லீம்களும் சேர்ந்து கடைகளை அடைத்தார்கள். அது ஒரு வெற்றி பெற்ற கடையடைப்பு. ஆனால் அதே போல ஒரு மக்கள் மயப்பட்ட நினைவு கூறுதலை ஏன் ஒழுங்குபடுத்த முடியவில்லை?

பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மக்கள் மயப்பட்ட நினைவுகூறுதல் என்று விளங்கி வைத்திருப்பது ஒரு பொது இடத்தில் தொகையான மக்களைக் கூட்டி விளக்கு ஏற்றி துக்கிப்பதைத்தான் . அதாவது ஒரு பொது இடத்தில் அதிக தொகை மக்களை கூட்டும்பொழுது அது ஒரு உணர்ச்சிகரமான நினைவு கூர்தலாக இருக்கும். கூட்டுத் துக்கம் உணர்வுபூர்வமாக வெளிப்படும். அப்படிப்பட்டதோர் கூட்டு நிகழ்வில் அரசியல்வாதிகளுக்கு அதிகம் ஆதாயம் உண்டு. அக்கூட்டுத் துக்கத்தை அவர்கள் கொத்து வாக்குகளாக மாற்றி எடுக்கலாம். நாயகர்கள் போல காட்சி தரலாம். படம் காட்டலாம்.

எனவே பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் நினைவு கூர்தலை ஓர் அரசியல் நிகழ்வாக ஒரு பொது வைபவமாக ஒழுங்குபடுத்தவே விரும்புகிறார்கள். அதற்குத்தான் வழக்காடுகிறார்கள்.

ஆனால் நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்துவது என்பது ஒரு பொது இடத்தில் கூட்டத்தைக் கூட்டுவது மட்டும் அல்ல. அது அதைவிட ஆழமானது. தமிழ் மக்கள் தனிப்பட்ட முறையில் இறந்தவர்களை நினைவு கூரும் நாட்களான ஆடி அமாவாசை.சித்திராப் பௌர்ணமி. அனைத்து மரித்தோர் தினம் போன்றவற்றை வீடுகளில் இருந்தபடியே அனுஷ்டிக்கிறார்கள். விளக்கீடு தீபாவளி போன்றவற்றையும் வீடுகளில் இருந்தபடியே அனுஷ்டிக்கிறார்கள். அவை மதம்சார் பண்பாட்டு நாட்கள் ஆகும். அவற்றை அனுஷ்டிக்குமாறு யாரும் தமிழ் மக்களுக்கு அறிக்கை விடுவதில்லை.

நினைவுகூறுதலையும் ஏன் அவ்வாறு ஒரு பண்பாடாக பரவலாக்க முடியவில்லை? இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளிடம் ஏதும் உரையாடல் நடந்திருக்கிறதா? துயிலும் இல்லங்களை துப்பரவாங்குவது அரசாங்கத்திடம் வினயமாகக் கேட்பது அல்லது நீதிமன்றங்களில் வழக்காடுவது கடைசியில் அறிக்கை விடுவது என்பவற்றுக்கும் அப்பால் நினைவுகூறுதலை எப்படி ஒரு பண்பாட்டு நிகழ்வாக மக்கள் மயப்படுத்துவது என்பது குறித்து பொருத்தமான அரசியல் தரிசனங்களும் செயற்பாட்டுத் தரிசனங்களும் தமிழ் அரசியல்வாதிகளிடம் உண்டா? அல்லது தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்களிடம் உண்டா?

கடந்த மே18ன் போதே இதை யோசித்திருக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் திலீபனின் நினைவு நாளிலாவது இதுகுறித்து யோசித்திருக்கலாம். ஆனால் அப்படியெல்லாம் யோசிக்கும் அளவுக்கு தொகுக்கப்பட்ட ஒரு ஒட்டுமொத்தத் தரிசனம் எத்தனை அரசியல்வாதிகளிடம் உண்டு?

எல்லாருமே அந்தந்த போகத்துக்குச் சிந்திப்பவர்கள் தான். அந்தந்த போகத்துக்கு அறிக்கை விடுபவர்கள் தான். அந்தந்த போகத்துக்கு நாடாளுமன்றத்தில் முழங்குபவர்கள் தான். அந்தந்த போகத்துக்கு படம் காட்டுபவர்கள் தான். மாறாக நினைவுகூறுதலை ஒரு பண்பாடாக கட்டியெழுப்புவது என்று சொன்னால் அதை எப்பொழுதிருந்தோ தொடங்கியிருக்க வேண்டும். அதற்கு ஆழமான அரசியல் தரிசனம் வேண்டும். விசுவாசம் வேண்டும். அர்ப்பணிப்பு வேண்டும்.

திலீபன் நினைவு நாளின்போது நீதிமன்றம் தடை விதித்தது. அதனால் நீதிமன்றம் தடை



விதிக்காத ஒரு பிரதேசத்தில் அரசியல்வாதிகள் திலீபனை நினைவுகூர்ந்தார்கள். அது ஒரு மக்கள் பயப்படாத நினைவு கூறுதல். ஆனால் அதன்பின் ஒழுங்கு செய்யப்பட்ட கடையடைப்பு முழு வெற்றி பெற்றது. அது ஒரு மக்கள் மயப்பட்ட நிகழ்வு. தமிழ் மக்கள் அந்தக் கடை அடைப்புக்கு முழு ஆதரவு கொடுத்தார்கள். கடைகளைப் பூட்டுவதற்கு ஒருவரும் பயப்படவில்லை. முஸ்லிம் மக்களும் அதில் இணைந்தார்கள்.

ஆனால் வீடுகளின் வெளி மதில்களில் சுட்டிகளை ஏற்றுங்கள் ஆலயங்களில் மணிகளை ஒலிக்கச் செய்யுங்கள் என்று கேட்கும் பொழுது ஏன் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் பின்னடிக்கின்றன?

விடை மிக எளிமையானது. பயம்தான் காரணம். பயத்தினால் தான் மக்கள் வெளிப்படையாகச் சுட்டிகளை ஏற்றி வைக்க அச்சப்படுகிறார்கள். அவ்வாறு சுட்டிகளை ஏற்றுவதன் மூலம் தங்கள் பாதுகாப்பைக் குறைத்துக் கொள்ள அவர்கள் தயாரில்லை. வெளிப்படையாக சுட்டிகளை ஏற்றி மணிகளை ஒலிக்கச் செய்து புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு ஆளாக அவர்கள் தயாரில்லை. இந்த அச்சம்தான் மக்கள் ஒன்று திரள்வதற்கு தடையாக இருக்கிறது. இந்த அச்சத்தை போக்க வேண்டியது அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் தான்.

கடைகளை அடைக்கும் பொழுது எல்லோரும் ஒன்றாகக் கடைகளை மூடாவிட்டால் கடைகளை மூடிய சிலரை பொலிசோ புலனாய்வுத் துறையோ விசாரிக்கும். எல்லோரும் கடைகளை ஒருமித்து மூடினால் எத்தனை பேரை விசாரிப்பது? இதுதான் மக்கள் மயப்படுவதன் முக்கியத்துவம் பலம். அதாவது திரட்சிதான் பலம். திரட்சியின் அளவே பலம்.

மக்கள் எல்லோரும் வீட்டு மதிலில் சுட்டிகளை ஏற்றினால் எல்லோரையும் விசாரிக்க முடியாது. எனவே நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்துவது என்பது ஆக்கூடுதலான மக்களை அதில் மானசீகமாகப் பங்களிக்க செய்வது தான். அதற்கு கட்சிகள் என்ன செய்யலாம்?

தேர்தல் காலங்களில் வீடு வீடாகச் சென்று ஸ்டிக்கர்களை ஒட்டுவது போல கட்சி தொண்டர்களை அனுப்பி ஒவ்வொரு வீடாக சுட்டிகளை ஏற்றுமாறு கேட்டிருந்தால் என்ன? தேர்தல் காலங்களில் தெருத்தெருவாக சென்று பிரச்சாரம் செய்வதுபோல ஒவ்வொரு கோவிலாக சென்று மணிகளை ஒலிக்குமாறு கேட்டால் என்ன? ஒரு அரசியல் நிகழ்வை மக்கள் மயப்படுத்துவது என்று சொன்னால் அதற்காக மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்வதற்கு பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். தேர்தல் காலங்களில் காசைக் கொடுத்து அவ்வாறான கட்டமைப்புக்களை உருவாக்குவதை போன்றதல்ல இது. உணர்வுபூர்வமான கிராம மட்ட கட்டமைப்புக்கள் எத்தனை கட்சிகளிடம் உண்டு? அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இருந்திருந்தால் ஏன் கிராமங்கள் தோறும் பரவலாக சுட்டிகளை ஏற்றுமாறு மக்களைக் கேட்க முடியாமல் போனது என்ற கேள்விக்குக் கட்சிகள் பதில் கூறட்டும். இது விடயத்தில் அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு கல்லில் பல வெற்றிகளை பெற்றிருக்கிறது. முதலாவது வெற்றி- நினைவுகூறுதலைத் தடை செய்ததன் மூலம் சிங்கள-பௌத்த வாக்காளர்களை சந்தோஷப்பட வைத்திருக்கிறது. இரண்டாவது வெற்றி- நினைவுகூறுதலைத் தடை செய்ததன் மூலம் நினைவு கூறுதலை ஒரு கூட்டு உரிமையாக ஏற்றுக்கொள்ளும் நிலை மாறுகால நீதிக்கு எதிரான கூர்மையான செய்தியை வெளிப்படுத்தியிருக்கிறது. அதாவது ஐ.நாவின் 30/1 தீர்மானத்துக்கு எதிரான ஒரு செய்தி அது.

மூன்றாவது- அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்கியது. அதாவது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உரிமையை சட்ட விவகாரமாக சுருக்குவதற்கு அந்த மக்களின் பிரதிநிதிகளையே மறைமுகமாக அதன் கருவிகளாக மாற்றியது.

நாலாவது- ஒட்டுமொத்தத்தில் நினைவு கூர்தலை மக்கள் பயப்படாத ஒரு நிகழ்வாக மாற்றியது.

ஐந்தாவது பத்து ஆண்டுகளின் பின்னரும் தமிழ் மக்களை பயத்தால் பிரித்து வைத்திருப்பது.நீதிமன்றத் தீர்ப்புகளின் பின்னணியில் படைத்தரப்பு மற்றும் பொலிசின் அதிகரித்த பிரசன்னத்தின் மத்தியில் சனங்கள் மேலும் பயபடுகிறார்கள்.

இது விடயத்தில் பயப்படாது துணிந்து ரிஸ்க் எடுக்கும் சிவாஜிலிங்கம் தமிழ் அரசியல் பரப்பில் ஒரு சீரியஸ் இல்லாத ஆளாகப் பார்க்கப்படுகிறார். கடந்த தேர்தலில் அவருக்கு கிடைத்த வாக்குகள் கிட்டத்தட்ட 10.000. அவருடைய துணிச்சலுக்கு தமிழ் மக்கள் வழங்கிய வெகுமதி அவ்வளவுதான். அவருடைய துணிச்சலை ஒரு சீரியஸில்லாத விவகாரமாக மாற்றியது துணிச்சலில்லாத் ரிஸ்க் எடுக்காத ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் தான். அதேசமயம் நினைவுகூறுதலை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்கி அதை தடுத்த அரசாங்கம் ஒரு விடயத்தை வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளத் தவறிவிட்டது. ஒரு கூட்டுத் துக்கத்தை வெளி வழிய விடுவது ஒரு குணப்படுத்த செய்முறையாகும். ஒரு கூட்டுத்துக்கம் அடக்கப்படுமாக இருந்தால் அது ஒரு கட்டத்தில் கூட்டு ஆவேசமாக் கூட்டுக் கோபமாக குமுறிக் கொண்டு வெளியே வரும். அதைத்தான் தமிழின் மூத்த கவிஞர்களில் ஒருவராகிய பொன்னம்பலம் அழகாகச் சொல்வார் **அடக்குமுறை என்பது விடுதலையைப் பிரசவிக்கும் மருத்துவிச்சி என்று. அது "அதிகாரம் புரியாத ஒரு சமன்பாடு" என்று.**




## சினிமாவில் ரீ–என்ட்ரி கொடுக்க தயாரான சுவாதி



திருமணத்துக்கு பிறகு சினிமாவில் நடிப்பதை தவிர்த்து வந்த நடிகை சுவாதி, தற்போது மீண்டும் படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறாராம்.

தமிழில் சுப்பிரமணியபுரம் படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சுவாதி. இந்த படத்தில் இடம்பெற்ற கண்கள் இரண்டால் உன் கண்கள் இரண்டால் என்னை கட்டி இழுத்தாய் பாடலில் சுவாதியின் நடிப்பு பேசப்பட்டது.

தொடர்ந்து கனிமொழி, போராளி, இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா, வடகறி, எட்சன் உள்ளிட்ட படங்களில் நடித்து இருந்தார். தெலுங்கில் அதிக படங்களில் நடித்தார். 2018-ல் சுவாதிக்கும், கேரளாவை சேர்ந்த விமானி விகாஸ் என்பவருக்கும் காதல் மலர்ந்து திருமணம் செய்து கொண்டனர்.

திருமணத்துக்கு பிறகு சினிமாவை விட்டு விலகி கணவருடன் இந்தோனேசியாவில் குடியேறினார். தற்போது ஐதராபாத்துக்கு திரும்பி பெற்றோருடன் வசிக்கிறார். சுவாதி மீண்டும் சினிமாவில் நடிக்க வருகிறார். சில படங்களில் நடிக்க வாய்ப்புகளும் வந்துள்ளன.

## என்னை தகுதியற்ற நடிகை என்பதா? – நடிகை டாப்சி ஆவேசம்

தகுதி இல்லாத நடிகை என விமர்சித்த ரசிகர்கருக்கு நடிகை டாப்சி சமூக வலைதள பக்கத்தில் பதிலடி கொடுத்துள்ளார்.

தமிழில் ஆடுகளம் படத்தில் அறிமுகமாகி முன்னணி நடிகையாக உயர்ந்துள்ள டாப்சி கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்கிறார். சமூக வலைத்தளத்திலும் சர்ச்சை கருத்துகளை துணிச்சலாக பதிவிட்டு வருகிறார். சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில், 'சினிமாவுக்கு வந்த புதிதில் ஒரு படத்தில் நடித்த போது, படத்தின் கதாநாயகனின் மனைவிக்கு என்னை பிடிக்காமல் போனதால் படத்தில் இருந்தே நீக்கி விட்டனர் என்றார்.



இந்தி பட உலகில் நிலவும் போதை பொருள் விவகாரம், வாரிசு அரசியல் போன்றவற்றை விமர்சித்த கங்கனா ரணாவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் கங்கனாவின் ரசிகர்கள் டாப்சியை விமர்சித்தனர்.

இந்த நிலையில் டாப்சியின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு ரசிகர், நீங்கள் தகுதி இல்லாத நடிகை, சினிமாவில் நடிக்க வேண்டாம் என்றெல்லாம் தகாத வார்த்தைகளால் திட்டி பதிவிட்டு இருந்தார். இது டாப்சிக்கு கோபத்தை ஏற்படுத்தியது. அந்த பதிவை டாப்சி ஸ்கிரீன்ஷாட் எடுத்து இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பகிர்ந்து, என்னை தகுதியாக்க என்ன செய்ய வேண்டும்.

நான் செய்ய வேண்டியது ஒரு விஷயம் தான். அது உங்கள் கண்களுக்கு தெரியாத தகுதியைத்தான். உங்கள் கருத்தை இன்னும் நான்கைந்து முறை பகிருங்கள். அது எனக்கு புரிகிறதா என்று பார்க்கிறேன்' என்று பதிலடி கொடுத்துள்ளார்.

## விஷால், ஆர்யா படத்தில் இணைந்த பிரபல நடிகர்

ஆனந்த் சங்கர் இயக்கத்தில் விஷால், ஆர்யா நடிக்கும் எனிமி படத்தில் பிரபல நடிகர் ஒருவர் இணைந்து இருக்கிறார்.

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களாக இருக்கும் ஆர்யா, விஷால் இருவரும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் இணைந்து பாலா இயக்கிய அவன் இவன் படத்தில் நடித்திருந்தார்கள். தற்போது நீண்ட இடைவெளிக்கு பிறகு இருவரும் இணைந்து நடித்து வருகிறார்கள்.

இப்படத்தை அரிமா நம்பி, இருமுகன், நோட்டா படங்களை இயக்கிய ஆனந்த் சங்கர் இயக்கி வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத்தில் சில தினங்களுக்கு முன்பு தொடங்கியது.

இப்படத்திற்கு எனிமி என்று பெயர் வைத்து டைட்டில் லுக் போஸ்டரையும் வெளியிட்டு இருந்தார்கள். தற்போது இப்படத்தில் பிரபல நடிகர் பிரகாஷ்ராஜ் இணைந்திருப்பதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறார்கள்.



## விமலின் திரைப்படத்திற்கு இடைக்காலத் தடை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு!

நடிகர் விமல் நடிப்பில் உருவான திரைப்படம் 'கன்னிராசி, கிங் மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் உருவான இந்தப் படத்தின் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரிக்கான விநியோக உரிமை மீடியா டைம்ஸ்' நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இதற்காக படத்தயாரிப்பாளர் ஷமீன் இப்ராஹிமுக்கு 17 லட்சம் இந்திய ரூபாவை மீடியா டைம்ஸ் நிறுவனர் அல்டாப் ஹமீது வழங்கியுள்ளார். ஆனால், ஒப்பந்தத்தின்போது உறுதி அளித்ததைப் போல 2018ஆம் ஆண்டுக்குள் படத்தைத் தயாரிப்பாளர் ஷமீன் இப்ராஹிம் வெளியிடவில்லை.

இந்நிலையில், 'கன்னிராசி திரைப்படம் இன்று (27/11/2020) வெளியாகும் எனத் தயாரிப்பு நிறுவனம் சமீபத்தில் விளம்பரம் வெளியிட்டிருந்தது. ஆனால், படத்தை வெளியிடும் உரிமையை மீடியா டைம்ஸீக்கு அளிக்கவில்லை. வேறு நிறுவனம் மூலமாக வெளியிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரிக்கான விநியோக உரிமைக்காக தன்னிடம் 17 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு வேறு நிறுவனம் மூலமாகப் படம் வெளியிடத் தடை விதிக்க வேண்டும் எனவும், தன்னிடம் பெறப்பட்ட தொகைக்கு வட்டியுடன் சேர்த்து இந்திய மதிப்பில் 21 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்று உத்தரவிடக் கோரியும் 'மீடியா டைம்ஸ்' நிறுவனம் சார்பில் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இவ் வழக்கை விசாரித்த நீதிபதி 'கன்னிராசி திரைப்படம் வெளியாக இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.மேலும், இந்த மனு தொடர்பாக டிசம்பர் 7ஆம் திகதிக்குள் பதிலளிக்க கிங் மூவி மேக்கர்ஸ் தயாரிப்பாளர் ஷமீன் இப்ராஹிமுக்கு உத்தரவிட்டார்.






## பெண்களின் கழுத்தின் கருமையை போக்கும் எளிய வீட்டு வைத்தியம்

பெண்கள் நிறைய பேருக்கு கழுத்தை சுற்றி கருமை தென்படும். இதை எளிய வீட்டு உபயோகப்பொருட்களை கொண்டே கழுத்தை சுற்றி படர்ந்திருக்கும் கருமையை போக்கிவிடலாம்.



பெண்கள் நிறைய பேருக்கு கழுத்தை சுற்றி கருமை தென்படும். நகைகள் அணிவது, உடல் வெப்பம், ஒவ்வாமை காரணமாக இந்த பிரச்சினை தோன்றும். எளிய வீட்டு உபயோகப்பொருட்களை கொண்டே கழுத்தை சுற்றி படர்ந்திருக்கும் கருமையை போக்கிவிடலாம். உருளைக்கிழங்கு கழுத்தில் இருக்கும் கருமையை போக்கும் தன்மை கொண்டது. உருளைக்கிழங்கை நன்றாக அரைத்து சாறு எடுத்து கழுத்தை சுற்றி தேய்த்து வரலாம்.

தயிரும் கருமையை போக்கி பிரகாசம் சேர்க்கக்கூடியது. சிறிதளவு தயிருடன் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாற்றை கலந்து கழுத்தை சுற்றி தடவலாம். சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவிவிடலாம். வாரம் ஒருமுறை செய்து வந்தால் போதும். நல்ல மாற்றம் தென்படும். இரண்டு டேபிள்ஸ்பூன் கடலை மாவுடன் மஞ்சள் அரை டீஸ்பூன், எலுமிச்சை சாறு அரை டீஸ்பூன், சிறிதளவு ரோஸ் வாட்டர் ஆகியவற்றை கலந்து பசை போல் தயார் செய்யுங்கள். அதனை கழுத்தை சுற்றி தடவி கால் மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவிவிடலாம். இவ்வாறு வாரம் இருமுறை செய்துவந்தால் கருமை நீங்க தொடங்கிவிடும்.

அப்பிள் சிடேர் வினிகரையும் பயன்படுத்தலாம். இரண்டு டேபிள்ஸ்பூன் ஆப்பிள் சிடேர் வினிகருடன் நான்கு டேபிள்ஸ்பூன் தண்ணீர் கலந்து பஞ்சில் முக்கி கழுத்தை சுற்றி தேய்த்துவரலாம். விரைவில் கருமை நீங்கிவிடும். பேக்கிங் சோடாவையும் உபயோகிக்கலாம். சிறிதளவு பேக்கிங் சோடாவுடன் தண்ணீர் கலந்து பசைபோல் குழைத்து கழுத்தில் தடவி வரலாம். கால் மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவிவிடலாம்.










## இஞ்சியின் மருத்துவ குணங்களும் பலன்களும் !!

ஒரு தேக்கரண்டி இஞ்சி சாறு மற்றும் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து உட்கொண்டால், சளி மற்றும் தொண்டைப்புண் போன்ற பிரச்சனைகளில் இருந்து விரைவில் நிவாரணம் அடையலாம்.

தொண்டை மற்றும் மூக்கில் ஏற்படக்கூடிய நெரிசலை போக்க இஞ்சி தேநீர் பயன்படுகிறது. செரிமானத்திற்கு அதிக நன்மை பயக்கும் மூலிகை இஞ்சி ஆகும் இதை உட்கொள்வது பித்தப்பை பித்தத்தை வெளிப்படுத்த மற்றும் செரிமானத்தை தூண்டி விட உதவும்.

இஞ்சியை கொண்டு தேநீர் தயாரித்தோ அல்லது இஞ்சியில் இருந்து தயாரிக்கப்பட்ட சப்ளிமெண்ட்டுகளையோ உட்கொள்ளலாம்.

இரத்த குழாய்களில் அழற்சி மற்றும் வலியை ஏற்படுத்தக்கூடிய புரோஸ்கிளாண்டைனை தடுப்பதன் மூலம், மைக்ரைன் எனும் ஒற்றைத் தலைவலியில் இருந்து நிவாரணம் அளிக்க இஞ்சி உதவுகிறது.

பல விதமான புற்றுநோய் செல்களை அதாவது நுரையீரல், கருப்பை, புரோஸ்டேட், மார்பகம் மற்றும் பெருங்குடல் பகுதிகளில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய புற்றுநோய் செல்களை எதிர்த்து போராடும் தன்மை இஞ்சியில் நிறைந்து உள்ளது.

உடல் எடை குறைக்க விரும்புபவர்கள் கட்டாயம் இஞ்சியை உணவு முறையில் சேர்த்துக் கொள்வது பெரும் நன்மை பயக்கும்.

சருமத்தின் மீது இஞ்சி சாறை தடவுவது தோலில் ஏற்பட்டுள்ள எரிச்சலை குறைத்து, எரிந்து போன சருமத்தின் இயல்பு நிலையை மீட்டெடுக்க உதவுகிறது. தோலில் காணப்படும் தழும்புகள் மீது புதிய இஞ்சி துண்டினை தேய்த்து வந்தால், அது 6 முதல் 12 வாரங்களுக்குள் தழும்புகளை மறைக்க உதவும்.



தொகுப்பு :- சப்தஹி

# கொரோனாவுக்குப் பிந்திய உலக ஒழுங்கு! மாறிக் கொண்டிருக்கும் பூகோளப் போக்குகள் குறித்த சில பார்வைகள்



**(சிராஜ் மஷ்ஹூர்)**

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

இறைதூதர்கள், தீர்க்கதரிசிகள், ஞானிகள் எதிர்காலம் பற்றிய முன்னறிவித்தல்களை, காலந்தோறும் வழங்கி வந்துள்ளனர். இந்த செய்திகளும் ஆருடங்களும் மனித வரலாறு நெடுகிலும் பாதுகாக்கப்பட்டு சேகரம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இவர்கள் ஒரு வகையினர். குறி சொல்வோர், சாத்திரம் சொல்வோர், காண்டம் பார்ப்போர், மந்திரிப்போர், கோள்களின் அசைவுகள், குருப்பெயர்ச்சி என்று இன்னொரு வகையினரும் எதிர்காலம் பற்றிப் பேசுகின்றனர்.

ஆனால், எதிர்காலங்களின் கற்கைகள் (Future Studies) இதிலிருந்து வேறுபட்டது. பல்துறை சார்ந்த அறிஞர்களும் ஆய்வாளர்களும் (Multi disciplinary approach உடன்), இதை தனியொரு விஞ்ஞான அறிவுத் துறையாக வளர்த்து வருகின்றனர். இத்துறையில் பட்ட மற்றும் பட்டப் பின்படிப்பு கற்கைநெறிகள் (Undergraduate and post-graduate programmes) உள்ளன. இத்துறையானது, மேலுள்ள வகையைச் சேர்ந்த தீர்க்கதரிசனங்களை (Prophecies) பகுப்பாய்வுக்கு உட்படுத்தி ஆராய வேண்டிய தேவையும் உள்ளது என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானது.

எதிர்காலவியலானது, வரலாற்றுக்கு (History) சமாந்தரமான இன்னொரு அறிவுத் துறையாக வளர்ச்சி பெற்று வருகிறது. பொதுவாக இதை சமூக விஞ்ஞானத்தின் ஒரு கிளை எனக் கருத முடியும். எனினும், இதன் அறிதலும் முறையியலும் (Knowledge and Methodology), இயற்கை விஞ்ஞானத்தைப் போலவோ, சமூகவிஞ்ஞானத்தைப் போலவோ போதியளவு நிரூபிக்கப்படவில்லை என்ற விமர்சனமும் காணப்படுகிறது.

நவீன சமூகவியலின் (Modern Sociology) முன்னோடி எனக் கருதப்படும் இப்னு கல்தூனின் (1332-1406) 'அல்-முகத்திமா' இதில் குறிப்பிடத்தக்க ஒரு ஆரம்ப முயற்சி. அது மிக முக்கியமான ஒரு நூல் என மதிக்கப்படுகிறது. 1516இல் சேர் தோமஸ் மோர் எழுதிய யுடோப்பியா (Utopia)வையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தம். வறுமையும் துன்பமும் இல்லாத வாழ்வதற்கு மிகவும் சிறந்த கற்பனை தேசமொன்றையே இதில் தோமஸ் மோர் வரைந்து காட்டுகிறார். இவரது பார்வையை, கற்பனாவாத சோசலிசம் என்ற வகைக்குள் அடக்குவர். இதை ஏன் முன்வைக்கிறேன் என்றால், இதன் பின்னர் சொல்லப்படுகின்ற விடயங்கள் ஒன்றும் தீர்க்கதரிசனங்கள் அல்ல, நான் எதிர்காலவியல் தொடர்பான போதிய அறிவுடையவனும் அல்ல என்பதை இங்கு சுட்டிக்காட்டவே.

எனினும், எதிர்காலவியலில் பயன்படுத்தப்படும், கடந்த கால தற்கால நிகழ்வுப் போக்குகள் பற்றிய நிகழ்வுக் கோலங்களின் அடிப்படையான புரிதலையே (Pattern-based Understanding) நானும் வழிமுறையாகக் கொள்கிறேன். இங்கு அவதானமும் பகுப்பாய்வுமே முதன்மை பெறுகின்றன.

*பகுதி – 07*

**அமெரிக்காவுக்கு என்ன நடக்கும்?**

கடந்த வருடம் டிசம்பரில், சீன நகரமான வூஹானில் தொடங்கிய Covid 19 தொற்று உலகெங்கும் பயணித்து, 200இற்கும் அதிகமான நாடுகளுக்குப் பரவியிருக்கிறது. இன்றைய திகதியில், நோய்த் தொற்றிலும் இறப்பு வீதத்திலும் அமெரிக்காவே முன்னிலையில் இருக்கிறது. சீனாவில் தொடங்கி அமெரிக்காவில் உச்சம் பெற்றிருக்கும் இந்நிலை காரணமாக, அமெரிக்க - சீன அதிகாரப் போட்டியின் போர்க்களமாக இந்த வைரஸ் விவகாரம் மாறியிருக்கிறது. தற்போது அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலும் நடந்து முடிந்திருக்கிறது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு நாளில் மட்டும் அங்கு 2228 பேர் இறந்துள்ளனர். ஒரு நாளில் இடம்பெற்ற அதிகூடிய இறப்பு எண்ணிக்கை இதுவேயாகும். ஒரு நாளில் 600,000 பேருக்கும் அதிகமானோருக்கு அங்கு Covid 19 தொற்றியிருக்கிறது. இது ஏறத்தாழ உலகளாவிய தொற்றின் மூன்றில் ஒரு பங்காகும்.

கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் இத் தருணத்தில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உலக சுகாதார நிறுவனத்திற்கு (WHO) வழங்கி வரும் நிதியுதவியை வெட்டிக் குறைத்திருக்கிறார். உள்நாட்டில் அவருக்கு கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. அவரின் இந்தப் போக்குத்தான் இம்முறை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் தோல்வியைத் தழுவியிருக்கிறார். எதிர்த்துப் போட்டியிட்ட ஜோ பைடன் அவர்கள் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக ஜனவரியில் பதவியேற்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலக சுகாதார நிறுவனம் செயற்படும் வேகம் போதாது என்று ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார். சீனாவை அதனுடன் கொழுவி விட்டும் உள்ளார். உலக சுகாதார நிறுவனத்திற்கு அமெரிக்காவே அதி கூடிய நிதியுதவியை வழங்கி வரும் நாடு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்குப் பதிலடியாக, அமெரிக்கா உலக சுகாதார நிறுவனத்திற்கு செய்ய வேண்டிய தனது பொறுப்பையும் கடப்பாட்டையும் நிறைவேற்றியாக வேண்டும் என்று சீனா வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இதை 'சீன வைரஸ்' (Chinese Virus) என்றே ட்ரம்ப் சொல்லி வருகிறார் என்பது இன்னும் சுவாரசியமானது. இது மரபின வெறி கொண்ட கருத்து (Racist Opinion) என்ற விமர்சனத்தையும் அவர் கருத்தில் கொள்ளவில்லை. இப்படி அழைப்பது இரு நாடுகளிடையேயான முறுகலை அதிகரிக்கச் செய்யும் என்ற நிபுணத்துவ ஆலோசனையைக் கூட அவர் அலட்சியம் செய்து விட்டார்.

அமெரிக்க பொருளாதார மையமான நியூயோர்க் நகரமே, அமெரிக்காவினுள் அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதுவும் கருத்தூன்றிக் கவனிக்கத் தக்க ஓர் அம்சமாகும். கொரோனா தாக்கத்தில் அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் இருக்கும் ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் (Uk) ஆகிய நாடுகள் அமெரிக்க முகாமைச் சேர்ந்த மேற்கைரோப்பிய நாடுகளாகும் (Western Bloc). இதற்கு அடுத்த நிலையில் இருக்கும் சீனா, ஈரான், துருக்கி ஆகியன, அமெரிக்க எதிர் முகாமைச் சேர்ந்த கிழக்கு நாடுகள் (Eastern Bloc) ஆகும். கொரோனா பாதிப்பின் முதல் 10 நாடுகளில் அவதானிக்கப்படும் இந்த வைரஸ் தொற்றின் பரவல் வேகமானது, இதிலுள்ள உலகளாவிய அதிகாரப் போட்டியின் 'ஏதோ ஒரு பரிமாணத்தை' உணர்த்தவே செய்கின்றது. இதை எளிதில் புறந்தள்ள முடியாது. ஆக, இந்த வைரஸ் யுத்தத்திற்கு, ஒரு சர்வதேச அரசியல் பரிமாணம் இருப்பதை ஊகித்து அறியலாம்.

*பகுதி- 08*

**அமெரிக்காவின் வீழ்ச்சி ஏற்கனவே தொடங்கிவிட்டது.**
**கொரோனாவுக்குப் பிந்தி அது வேகமடையும்.**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் (1945), உலகுக்கு தலைமை வழங்கும் நாடாக அமெரிக்கா, தன்னைத்தானே உத்தியோகப் பற்றற்ற முறையில் பிரகடனம் செய்து கொண்டது. பொருளாதார பலம், இராணுவ பலம், பூகோள அரசியல் ஆதிக்கம், கலாசார செல்வாக்கு, தொழில்நுட்ப மேலாண்மை காரணமாக அமெரிக்கா ஒரு வல்லரசாக மாறியது. உலகப் பொலிஸ்காரன் பாத்திரத்தை தானாகவே அது ஏற்றுக் கொண்டது. அமெரிக்க நலன்களுக்காக உலகம் கொடுத்த விலை மிகப் பாரியது. பல நாடுகளில் (குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவில்) பல ஆட்சிக் கவிழ்ப்புகள் இடம்பெற்றன. மூன்றாம் உலகின் எதிர்காலமும் நலன்களும் மிக மோசமாகப் பலியிடப்பட்டன. அமெரிக்க மோகம் பலரைப் பிடித்து ஆட்டியது. இந்த அமெரிக்காவால், உலகப் பொலிஸ்காரனாக ஒரு நூறு வருடங்கள் கூட தாக்குப்பிடிக்க முடியாது என்பதுதான் வரலாறு சொல்லும் பாடம். 2050இல், 2030இல் ஏன் 2025 இலேயே அமெரிக்க வல்லாதிக்கம் சரிந்து விடும் என்று பலராலும் எதிர்வு கூறப்படுகிறது. எந்தவொரு பேரரசும் திடீரென்று வீழ்வதில்லை. வீழ்ச்சி, ஒரு தொடர்ச்சியான செயன்முறையின் பதில் விளைவு. அமெரிக்கா ஏற்கனவே படிப்படியாக விழத் தொடங்கிவிட்டது என்பதே உண்மையாகும்.

டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்கா வீழ்கிறது என்று பகிரங்கமாகப் பேசி வருகிறார். உலக அரங்கிலிருந்து வாபஸ் வாங்கும் வெளிநாட்டுக் கொள்கையை ஊக்குவிக்கிறார். ட்ரம்பின் வருகை அமெரிக்க வீழ்ச்சியின் மிகச் சிறந்த குறிகாட்டி (Indicator) என்கின்றனர். ட்ரம்புக்கு முன்பே அமெரிக்காவின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது என்பதே தெளிவான யதார்த்தமாகும்.

2016இல், அமெரிக்காவின் பூகோள தலைமைத்துவத்திற்கான உலகளாவிய அங்கீகாரம் 48% ஆக இருந்தது என்றும், இரண்டே இரண்டு வருடங்களில் அதாவது 2018இல் அது 30% ஆகக் குறைந்து விட்டது என்றும் Gallup pollsters கணிப்பீடுகள் சுட்டிக் காட்டுகின்றன.

பொருளாதாரப் பலம், இராணுவ வல்லமை, பண்பாட்டு ரீதியாக ஆதிக்கம் செலுத்த இயலுமான மென் அதிகாரம் (Soft Power) என்ற மூன்று தூண்களில்தான், அமெரிக்க வல்லாதிக்கம் நிலைத்திருக்கிறது என்பர். உலக அளவில் பரந்து கிடக்கும் இராணுவக் கட்டுமானத்தைப் பராமரித்துப் பாதுகாப்பதற்கு, எப்போது ஒரு வல்லரசு தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையால் தடுமாறுகிறதோ, அப்போதே அது விழத் தொடங்கிவிட்டது என்று அர்த்தம்.

உதாரணத்திற்கு ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் யுத்தங்களை நடத்துவதற்கான செலவினம், 4.4 டிரில்லியன் அமெரிக்க டொலர் என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்கா இது போன்ற மீள முடியாத பொருளாதார வங்குரோத்துப் பொறிக்குள் அகப்பட்டுவிட்டது.

தொடரும்...

6ஆம் பக்க தொடர்ச்சி...

கைது செய்யப்பட்டவர்களை கொல்வது அல்லது சித்திரவதை செய்வது, பணயக்கைதிகளாகச் சிறைப்பிடித்து ஒட்டு மொத்தமாக பெருந்தொகை மக்களுக்கு தண்டனை கொடுப்பது, தவிர்க்க கூடிய இடர்பாடுகளை தவிர்க்ககூடிய சூழ்நிலையிலும் அவற்றை சிவிலியன்கள் மீது திணிப்பது போன்றவற்றுக்கு எதிரான பிரத்தியேக விதிமுறைகளை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் கொண்டிருக்கின்றன.

இந்த சர்வதேசசட்டங்களை, மனிதபிமானச் சட்ட விதிமுறைகள் என்பவற்றை எல்லையற்ற வகையில் ஸ்ரீ லங்கா அரசில் இராணுவம் மீறியுள்ளன என்பதற்கு அதிகளவான சான்றுகள் உள்ளன. செய்மதி மூலம் எடுக்கப்பட்ட பிரதிமைகளும் Channel 4 போன்ற ஊடகங்களுக்கு கிடைத்துள்ள தகவல்களும் இதனை வலியுறுத்துகின்றன. எனவே ஸ்ரீ லங்காவில் போர்க்குற்றங்கள், இன ஒழிப்பு நடவடிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கியதாகவே இத்தீர்மானம் அமைந்துள்ளதெனக் கருதுவதற்கு இடமுண்டு. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள், செயல்பாடுகள் துரிதகதியில் நடக்கத்தொடங்கின. இதன் நடவடிக்கைகளை முன்னின்று செயல்படுத்த சர்வதேச நிபுணர் குழு நிறுவப்பட்டது.

இக்குழுவிற்கு அநுசரணையளிக்கும் வண்ணம் புலன்விசாரணைக்குழு அமைக்கப்பட்டு தகைமை வாய்ந்த செயற்பாட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட நவநீதம் பிள்ளை அம்மையார் (Madam Navaneetham Pillai) இன் பணிக்காலம் முடிவடைந்த பின்னர் Prince Zeid al-ussein அவர்களின் வழி நடத்திலில் சர்வதேச விசாரணைக்குழு தனது பணியை தொடர்கிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட வாய்மொழிமூலமான சமர்ப்பணம், இந்த விசாரணை எந்த வழியில் செல்லக்கூடிய தென்பதற்கு ஓரளவு பூடமாக சில விடங்களைக் கூறி நிற்கிறது. இந்த விசாரணைக்குழுவுக்கு சவாலாக இருக்கும் பிரதானமான விடயம் என்பது, நடந்த சம்பவங்களுக்கான, விசாரணைக்குட்படுத்தக் கூடிய நிகழ்வுகளுக்கான சான்றுகளைச் சேகரிப்பது தான். இந்தச் சான்றுகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. சித்திரைவதைக்கு உள்ளானவர்கள், சட்டரீதியாகவன்றி கைது செய்யப்பட்டவர்கள், பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டவர்கள், காணமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் போன்ற பலர் ஏற்கனவே வெளி நாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்களின் சாட்சியங்கள், வாக்குமூலங்கள் எற்கனவே எடுக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. இச்சாட்சியங்களின் அடிப்படையிலேயே விசாரணைகளை முன்னெடுக்கக் கூடியதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. எனினும் உள்நாட்டில்வாழும்மக்களின் சாட்சியங்களும் அத்தியவசியமானது எனத் கருதப்படுகிறது. யுத்தத்தின் போது நடந்தேறிய அக்கிரமங்களை கண்கூடாகக் கண்டவர்கள்,

யுத்த பூமியில் பார்வையாளர்களாயிருந்த இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் இவ்விசாரணை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைக் கண் கூடாக பார்த்த நேரடிச்சாட்சிகளாவர். இவர்கள் நாடெங்கிலும் சிதறி வாழ்கிறார்கள். இவர்களை இனம் கண்டு ஒன்று சேர்த்து சாட்சியங்களை சேகரிப்பது இலகுவான செயல் அல்ல. இப்படிப்பட்ட மக்கள் தங்களது சொந்தங்களை இழந்து, பெற்றோர், சகோதரர்கள், கணவன், மனைவி, பிள்ளைகள், உற்றார்களை இழந்து மனம் பேதலித்து வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியயையும் துயரத்திலேயே கழிப்பவர்கள். இவர்களில் பலர் தமது அன்றாட சீவியத்துக்கும் அடுத்த நேர உணவுக்கும் உத்தரவாதமின்றி, வாழ்வாதரங்களை இழந்தவர்கள். இவர்கள் தாங்களாகவே முன்வந்து சாட்சியங்களை முன்வைப்பதற்கு உரிய நிலையில் இருப்பார்கள் என்று கூற முடியாது. இதற்காக, பெறுமதி வாய்ந்த இவர்களின் சாட்சியங்கள் எடுக்கப்படாமலே விட்டுப் போகுமோ என்று விசனம் உணரப்படுகின்றது. சமூகத்திற்கு விடியலைக் கொடுப்பதற்கான வாய்ப்பு , இழைக்கப்பட்ட அநீதிகளை அம்பலப்படுத்துவற்கான சந்தர்ப்பம் வீணாக்கப்படாமல் நன்கு உபயோகப்படுத்த வேண்டும். வாராது வாய்த்த இந்த வாய்ப்பு இப்போது பயன்படாவிட்டால் வாழ் நாள் முழுவதற்கும் எங்கள் தலை முறை வருத்தப்பட வேண்டி வரும் என்ற விடயத்தை நன்கு நினைவு கொள்ளவேண்டும். மக்கள் பயந்திருந்த காலம் முடிவுக்கு வந்து விட்டது.இவ்வளவு கொடுமைகளையும் தாங்கி விட்டோம், இனிமேல் பயங்கொண்டு காப்பற்றுவதற்கு மீதமென்ன இருக்கிறது என்ற நிலைக்கு மக்கள் வந்து விட்டார்கள். எனவே அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள், சட்டத்தரணிகள், தொழில் சார் நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் சரித்திர முக்கியத்துவம்மிக்கதங்கள் கடமைகயை உணர்ந்து இச்சாட்சியங்களை சரியான வகையில் நெறிப்படுத்தி தகுந்த பொறிமுறைகள் மூலமாக சர்வதேச விசாரணைக் குழுவிற்கு அனுப்புவதற்கு கடமைப்பட்டவர்கள். அதற்கான வழிமுறைகள் அவர்களுக்குத் தெரியும். தெரியாவிட்டால் இது பற்றி நன்கறிந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்களை அணுகலாம். பாதுகாப்பாக , சட்டத்திற்கமைய இந்த நடவடிக்கைகளை ஆற்றக்கூடிய வாய்ப்புள்ளது. இச்சான்றுகளும் சாட்சியங்களும் சென்றடைவதற்கு இம்மாதம் ஒக்ரோபர் 31ம் திகதி வரையே கால அவகாசம் உள்ளது. இச்சாட்சியங்கள் பிரதானமாக, சத்தியக்கடதாசிகள் மூலம் (affidavit) அளிக்கப்பட வேண்டும். சத்தியக்கடதாசிகள் மூலம் அளிக்கப்படும் சான்றுகள் நீதிமன்றங்களில் கூட ஏற்கப்படும் தன்மையுள்ளன. தாங்கள் நேரடியாக அனுபவித்த, பார்த்த சம்பவங்களைக் கோவையாக, தெளிவாக பதிவிடல் வேண்டும். இக்கால கட்டத்தில், காணாமல் போனோரின் விடயமும், அவர்களது உற்றார் உறவினர்களின் முடிவுறாத போராட்டங்களும் பிரத்தியேகமாக பதிவு செய்யப்பட வேண்டியவை ஆகும். உயிரிழப்புகள், கைதுகள், துன்புறுத்தலுக்கு ஆனோர்கள் கூட வாழ்க்கையில் பல்வேறு திருப்பங்களுக்கும் நெருக்குதல்களுக்கும் உள்ளாகி ஓரளவு மனம் தளர்ந்தாலும் கூட காணமல் போனோரின் உறவுகள் தங்கள் உறுதி குறையாமல் மேன்மேலும் அரசாங்கத்திற்கு நெருக்கடியாக உள்ளார்கள். மனத்துணிவுடன் நீதிமன்றை நாடி ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்து தங்கள் உறவுகளுக்கும் தமிழ் சமூகத்திற்கும் நேர்ந்த இன்னல்களை முறையாக பதிவு செய்ததில் முன்னுதாரணமாக திகழ்கிறார்கள். இவர்கள் மூலமாக வெளிப்பட்டுள்ள சான்றுகளும் பதிவுகளும் சர்வதேச விசாரணைகளை பலப்படுத்தும் என்பது நிச்சயம்.

முன்னர் குறிப்பிட்ட நபர்கள், ஸ்தாபனங்கள் யாவும் சுயாதீனமாக, அச்சுறுத்தலின்றி செயற்படுவதற்கு சில சிக்கல்கள் உள்ளன. தகவல் தர முன் வருபவர்களை சுதந்திரமாக விசாரித்து வழிநடத்திச் செல்வதற்கான உபாயங்கள், காரியாலயங்கள், உட்கட்டமைப்புகள் விடயத்தில் குறைபாடுகள் நிலவிய போதும், தாங்களாகவே முன்வந்து, சொந்த பாதுகாப்புக் கரிசினைகளையும் புறந்தள்ளி, சாட்சியங்களை முறையாகப் பெற்று குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பிக்கொண்டு தான் இருக்கிறார்கள். இந்த நிலைமையில், உத்தியோகபூர்வமாக தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதுவும் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களால் அபரீதமாகக் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக வடமாகாணசபை விளங்குகிறது. அதுமட்டுமன்றி சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரி முன்னேற்றகரமான ஆனதீர்மானம் ஒன்றினை முன்னுதாரணமாக நிறைவேற்றி இருக்கிறார்கள் வடமாகணசபை உறுப்பினர்கள். அவர்கள் அத்துடன் நிற்காது, மக்களின் சாட்சியங்களை முன்னெடுத்துச் சரியானவகையில் கால அவகாசத்துக்குள் அனுப்புவதற்கும் பொதுமக்களை ஊக்கப்படுத்துவதுடன் அதற்கான அனுசரணையையும் உத்வேகத்தினையும் கொடுப்பது அத்தியாவசியமாகிறது. வடமாகாணத் தமிழ் மக்கள் தங்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட அராஜகத்தினையும் பொருட்டாக மதிக்காது மாகாணசபையைத் தேர்ந்தெடுத்து உள்ளார்கள். இவர்களனைவரும் இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு முகம்கொடுத்து, சொல்லில் அடங்கா இழப்புக்களை சந்தித்தவர்கள். இவர்களுக்கும் பாரிய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இவற்றில் முதன்மையானது பொறுப்புகூறல் கடமை சம்பந்தப்பட்டதாகும். தங்களுக்கிழைக்கப்பட்ட மனிதாபிமானமற்ற செயல்கள் விடயத்தில் இவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். சுருக்கமாக சொல்வதெனில் கொடுமை இழைத்தவர்கள் அடையாளம் காணப்பட்டு தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். இதனை வேறு விதத்தில் கூறவேண்டுமென்றால் பொறுப்புக்கூறும் கடமையும், கட்டளைச்சங்கிலியின் தொடர்ச்சியும் இனம் காணப்பட வேண்டும் என்பதாகும். பொறுப்புகூறல் எனும் கடமைக்கு ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் பதில் அவ்வாறு ஒன்றுமே நடக்கவில்லை. பொதுமக்களுக்கு zero இழப்புக்களுடன் இது ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்பதாகும்.

வடக்கு, கிழக்கில் பாரிய முன்னேற்றத்திட்டங்கள் நடைபெறுகின்றன. உட்கட்டமைப்பு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன எனவும் கூறி சர்வதேசத்தை திசைதிருப்பும் முயற்சி நடைபெறுகிறது. வடமாகாணசபை இவ்வாறான பிரசாரங்களுக்கு எடுபட்டுவிடக்கூடாது. இதுசாதாரண நிர்வாகப் பிரச்சினையோ முன்னேற்றத்திட்ட முனைவுகளோ அல்ல. இறுதியில் அரசியல்ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய இனப்பிரச்சினையாகும். தொலைநோக்குடன் செயல்படுவதற்கு தமிழ்தலைமைகள் கடப்பாடு உடையவர்களாவர். வெறுமனே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு காலத்தையும் போக்கி மூக்குடைபட்ட உதாரணங்கள் சமீபத்திய அரசியல் வரலாற்றில் உண்டு. அரசாங்கத்தின் ஆசைவார்த்தைகளுக்கு மயங்கியோ, அண்டை நாடுகளின் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியோ பேச்சுவார்த்தை என்ற கானல் நீரில் மூழ்குவதும், பொறுப்புகூறல் என்ற அடிப்படைக் கோரிக்கையிலிருந்து விலகுவதும், தமிழ் இனம் முழுவதற்கும் இழைக்கப்படுகின்ற மாபெரும் துரோகமாகக் கணிக்கப்படும். 2009ஆம் ஆண்டில் போரின் முடிவின் போதும் அதன் முன்னரும் பின்னரும் நடந்த இனப்படுகொலைகளை சர்வதேச விசாரணை மன்றுக்கு முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக, அவைகளை சாதாரண மனித உரிமைகளாக சித்தரித்து அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் குறைக்கும் சமரசப் போக்கில் அரசு சார்பானவர்கள் மட்டுமல்லாது, தமிழ் மக்களின் பிரதி நிதிகள் எனக் கூறிக்கொள்பவர்களும் ஈடுபட்டுள்ளது, புரியாத புதிராக இருப்பதுடன் வேதனைக்குரியதொன்றாகும்.

ஸ்ரீ லங்கா அரசு உள் நாட்டில் எதுவித எதிர்ப்பையும் இலகுவாக முறியடிப்பதுடன், தேர்தல்களில் வெற்றி மேல் வெற்றி பெற்று, முழு நாட்டையும் இராணுவ கட்டுபாட்சிக்குள் கொண்டு வந்து, தமிழ் மக்களின் வாழ்வையும் இருப்புகளையும் கபளிகரம் செய்து கொண்டு இருக்கும் இத்தருணத்தில், அரசுக்கு எதிராக உள்ள ஒரே ஒரு சவால் ஐ.நா முன்னெடுக்கும் சர்வதேசவிசாரணை ஆகும். இனப்படுகொலை என்ற பதத்தின் வரைவிலக்கணத்திற்கு அமைவாக விசாரணைகள் சட்டரீதியாக ஏற்கப்படுமா? என்கிற நுணுக்கமான சர்ச்சைகளுக்குள் இப்பொழுதே இறங்காமல், இனப்படுகொலைகள் நடந்ததை உலகறியச் செய்வதும் அதற்கான சான்றுகளை சேகரிக்க உதவுவதும் தமிழ் மக்களினதும் அவர்களின் பிரதி நிதிகளினதும் கடமையாகும்.

நடந்தேறிய இனப் படுகொலையை, இனப்படுகொலை என்று தமிழ் மக்களே சொல்லாவிட்டால், வேறு எவர் இருக்கிறார்கள் அவ்வாறு கூறுவதற்கு? விசாரணை மன்றங்கள் முடிவு செய்வதற்கு முன்னரே நாமாகவே எங்களுக்கு இருக்கும் ஒரே ஒரு துரும்புச்சீட்டை கை நழுவ விடுவது தற்கொலைக்கு ஒப்பானதாகும். சர்வதேச விசாரணைகளை நோக்கிய தமிழ் மக்களினது நீண்ட நெடும் பயணத்திற்கு புலம்பெயர் தமிழர்களும் தமிழ் நாட்டு உணர்வாளர்களும் மாபெரும் உந்துசக்தியாக விளங்குகிறார்கள். இவர்கள் மட்டும் இல்லாவிட்டால் தமிழ் மக்களின் போராட்டம் ஏற்கனவே முற்றுமுழுதாக முறியடிக்கப்பட்டிருக்கும். எங்கள் விவகாரத்தை நாங்களே பார்த்துக் கொள்வோம் இதில் தலையீடு செய்யாதீர்கள் என்று அவர்களிடம் கூறுவது, யதார்த்த நிலையை உணராதவர்களின் கூற்று என்பதுடன், கண்களை விற்று சித்திரம் வாங்கியதற்கு ஒப்பானதாகும்.

5ஆம் பக்க தொடர்ச்சி...

ஆனாலும் அவர் தமிழ் மக்கள் வெற்றிபெற வேண்டும் என்றவொரு நோக்கத்தோடு இணைந்து கொண்டார். அவருக்கு தேசியப்பட்டியல் கூட வழங்கவில்லை. பழம் பெரும் அரசியல்வாதி என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அரசியலில் பழம் தின்று விதையினை விதைத்தவர். குறிப்பாகச் சொல்லப்போனால் அரசியலில் சித்தார்த்தன், ஆனந்தசங்கரி, சம்பந்தன், மாவை சேனாதிராஜா, பொன்.செல்வராசா இந்த ஐவரும் தலைசிறந்த அரசியல்வாதிகளாவர்.

ஆனந்தசங்கரி தேசியப் பட்டியலூடாக மாகாணசபைக்கு தெரிவுசெய்யப்படுவாரென செய்திகள் தெரிவித்த போதும் அவர் புறக்கணிக்கப்பட்டார். யாழ் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் ஐங்கரநேசன் அவர்களுக்கு விவசாயத்துறை அமைச்சு வழங்கப்பட்டபோதிலும் அவ்வமைச்சு சித்தார்த்தன் அவர்களுக்கே வழங்கப் பட்டிருக்கவேண்டும். தமிழரசுக் கட்சி தனது வல்லாதிக்கத்தினை பெரும்பான்மையாக வைத்துக் கொண்டதன் ஊடாக தமக்கு சாதகமானவர்களையே உள் வாங்கிக்கொண்டது.

அந்த வகையில் கல்வியமைச்சராக குருகுலராஜா, மீன்பிடி அமைச்சராக டெனீஸ்வரன், சுகாதார அமைச்சராக சத்தியலிங்கம், விவசாய அமைச்சராக ஐங்கரநேசன் போன்றோர் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டிருந்தால் இவ்வாறான நிலைமைகள் அனைத்தும் சமமான முறையில் வழங்கப்பட்டிருக்கும். தமிழரசுக்கட்சியின் வல்லாதிக்கம் அதிகமாக இருந்ததன் காரணமாக தமது நிகழ்ச்சிநிரல்களுக்கேற்ப செயற்படக்கூடியவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் 89,000 இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற அனந்தி சசிதரனுக்கே அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை. காரணம் விடுதலைப்புலிகளின் பிரதிநிதித்துவத்திற்குட்பட்டவர் என்ற காரணத்தினால் தமிழரசுக்கட்சி அவரை விலக்கிவைத்திருக்கலாம். தமது சொற்படி மேற்குறிப்பிடப்பட்ட கட்சிகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாகவிருந்தால் தமிழரசுக்கட்சி என்ற கடிவாளத்தினை தளர்த்தக்கூடாது. தளர்த்துமாக விருந்தால் தமிழரசுக்கட்சிக்கு ஆபத்து.

## வாழ்க்கை தத்துவம்

**பிரச்சனை என்பது**
**தொலைநோக்கி போலவே நீ**
**பார்க்கும் பார்வையில் தான்**
**எல்லாம் அடங்கி இருக்கிறது**
**அதை பெரிதாக நினைத்தால்**
**பெரிதாகத்தான் தோன்றும்**
**சிறியதாக நினைத்தாள்**
**பிரச்சனை உனக்கு ஒரு**
**பொருட்டாகவே தெரியாது.**

# தமிழ் அரசியல் தலைமைகளும், ஈழக் கோரிக்கைகளும்

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் சிங்கள பௌத்த மேலாதிக்க கொள்கை காரணமாக சிறுபான்மை இன அடக்குமுறையானது இலங்கையில் விஸ்வரூபமெடுத்தது. 1958, 1968, 1983 என தமிழர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. சிறுபான்மை - பெரும்பான்மை என்ற நிலைப்பாடு இனக்குரோத நிலைக்கு இட்டுச் சென்றது. சிறுபான்மை இனமானது தனது கலாச்சார விழுமியங்கள், கல்வி போன்றவற்றை இழந்து நிர்க்கதியானது. அன்று தமிழர்களின் குரலாக தமிழர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றுபட்டு அகிம்சை ரீதியாக போராட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் அவ் அகிம்சைப் போராட்டங்கள் அனைத்தும் இனவாத, மதவாத கொள்கைகளினால் கட்டுண்டு இருந்து பெரும்பான்மை இன அரசியல் தலைமைகளால் காலில் போட்டு மிதிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

கல்வியில் சீரும் சிறப்பாக வாழ்ந்த தமிழினம் அன்று இலங்கையை ஆக்கிரமித்த பிரித்தானிய மகாராணியிடம் நேர் நின்று தங்களது ஆங்கிலப் புலமையாலும் தங்களின் கல்வியின் சிறப்பாலும் போராடிய தமிழர்களை, எக்கல்வியால் அவர்கள் உயர்ந்து இருந்தார்களோ அக்கல்வியை சிதைத்து, தரப்படுத்தல் என்னும் ஆயுதத்தை கையிலெடுத்த சிங்கள அரசியல் தலைமைகள் அத்தரப்படுத்தலால் தமது கல்வி சிதைக்கப்படுவதை உணர்ந்த தமிழ் மாணவர்கள் அகிம்சை வழியில் போராடினார்கள். அகிம்சை என்பது சிங்களத் தலைமைகளின் மனங்களில் சிரிப்பூட்டும் விடயமாகவும் கேலியான விடயமாகவும் பார்க்கப்படுகின்றது. அகிம்சை வழியை போதித்த புத்த பெருமானை வழிபடும் இவர்கள் தமிழர்கள் அகிம்சை வழியாக முன்வைத்த விடயங்களை தங்களின் கோர முகம் கொண்டு அடக்க முற்பட்டபொழுது வேறு வழியின்றி ஆயுதப்போராட்டம் உதயமாகிகடந்த 30 ஆண்டுகாலமாக பெரும் அழிவினை நாடும் மக்களும் சந்தித்தனர்.

தமிழர்களின் ஒரே தீர்வு தமிழர்களுக்கு ஒரே விடிவு. தமிழர்கள் தங்களின் சுயநிர்ணய, சுயகௌரவம், கலாச்சாரம், அவர்களின் பண்பாடுகள் அனைத்தையும் ஒருங்கே பெற்று நிம்மதியாக வாழ வேண்டுமானால் அதற்கு ஒரே தீர்வு தனித் தமிழீழம் தான் என முடிவெடுத்து தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதித்தார்கள்.

இதில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ விடுதலைக்கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னிலை (ஈ.பி.ஆர்.எல்.எப்), ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) என ஐந்து போராட்ட அமைப்புக்கள் ஒரே கொள்கை, ஒரே இலக்கு, ஒரே பார்வை என போராடத் தொடங்கினார்கள். அன்று அகிம்சை வழியில் போராடி பயனில்லை என முடிவெடுத்த பல பெரும் தமிழ்த் தலைவர்கள் இளைஞர்களுக்கு வெற்றி திலகமிட்டு வழியனுப்பிவைத்தார்கள். இதில்முக்கியமான விடயம், வட்டுக்கோட்டை மண்ணில் வைத்து அப்பாத்துரை அமிர்தலிங்கம் அவர்கள் இனிப் பேசிப்பயனில்லை எமக்கு முன் உள்ள ஒரே வழி தமிழீழம் தான் என்று இரத்தத் திலகமிட்டு முழங்கினார். அன்று போராட்டத்தை தொடங்கிய இளைஞர்களுக்கு எமக்கு அருகில் உள்ள உலகின் வல்லரசாக கணிக்கப்படும் இந்தியா ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கி ஆதரவு அளித்தது. இதில் தனது பிராந்திய நலன் சார்ந்து மட்டுமே அது செயல்பட்டது என்பதை பின்னாளில் தமிழ் மக்களும், ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் புரிந்துகொண்டனர்.

போராட்டங்கள் வீறு கொண்டு சென்றது. தமிழர்களின் மனங்களில் தங்களுக்கு ஒரு விடிவு காலம் முளைத்துவிட்டதாக எண்ணி குதூகலமடைந்தனர். தம்மைக்காக்க தமது இனத்தின் மறவர்கள் உதயமாகிவிட்டார்கள் என புலகாங்கிதம் அடைந்தார்கள். தங்களால் முடிந்த உதவிகளை வாரிவழங்கினர். அன்று தான் தமிழர்களின் போராட்டப் பயணத்தில் சாபம் புகுந்தது. ஆம், ஒற்றுமையாகப் போராடிய தமிழ் அமைப்புக்களைக் கண்டு அஞ்சியது சிங்கள இனத் தலைமைகள். அவர்கள் மட்டும் அஞ்சவில்லை. ஆயுதம் அளித்து பயிற்சிகள் வழங்கி போராட்டத்தை ஊக்கப்படுத்திய இந்தியாவும் பயந்து போனது. இந் நிலையில் சென்றால் இலங்கையில் இரு நாடு உதயமாகிவிடும். இது தனது பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலும் தமது நாட்டுக்குள்ளும் தங்களைப் பிரித்துத் தரும்படி போராட்டங்கள் வெடிக்கும் என அஞ்சி தனது பிராந்திய சுயநலனுக்காக ஒற்றுமையுடன் போராடிய எம் இனத்தின் தமிழ் ஆயுத அமைப்புக்களை ஒன்றோடு ஒன்று முட்டி மோதவிட்டு குளிர்காய்ந்தது இந்திய வல்லாதிக்கம்.

அதேவேளை மொழியால் ஒன்றுபட்டு மதத்தால் வேறுபட்டுள்ள முஸ்லீம்களும் தமிழர்களுடன் இணைந்து போராடினார்கள். இதனைக் கண்டு அஞ்சிய சிங்களப் பேரினவாதம் அன்றும் இன்றும் உலகப் புலனாய்வில் உச்சத்தில் இருந்த இஸ்ரேல் நாட்டு மொசாட் அமைப்பின் உதவியுடன் சிறுபான்மை இனமான தமிழர்களையும் முஸ்லீம்களையும் மோதவிட்டு பிரித்தாளும் கைங்காரியத்தை மேற்கொண்டது. தமிழர்களின் விடிவில் ஏன் சிறுபான்மை இனங்களின் விடிவில் இடி விழுந்து போனது. போராளிகள் தங்களுக்குள்ளே முட்டி மோதினர். தமிழினத்தின் விடிவுக்காகவும், தமிழர்களின் இருப்பை உறுதி செய்யவும் தமிழர்களின் உயிரை ரோ என்னும் புலனாய்வின் வலையில் சிக்கவைத்து எந்த இனத்தைக் காப்பாற்ற முயன்றார்களோ அதே இனத்தை அழிக்க முற்பட்டனர். போராட்ட வடிவங்கள் மாறிப்போயின. பெரும்பாலான தமிழ் ஆயுத அமைப்புக்கள் இந்திய ரோவின் காலடியில் வீழ்ந்தன. இன்னும் சில ஆயுத அமைப்புக்கள் எந்த அரசிடம் விடுதலை வேண்டி போராட புறப்பட்டமோ அதே அரசின் காலடியில் சரணாகதி அடைந்தனர். இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டும் தமிழர்களின் விடிவுக்காகவும், தம் கொள்கை மாறாமலும் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

அகிம்சை - ஆயுதம் என பல போராட்டங்கள் இடம்பெற்றன. உலக வல்லரசுடன் முட்டி மோதினார்கள். இலங்கை அரசுடன் நேர் நின்று மோதினார்கள். அவர்களின் விஸ்வரூப வளர்ச்சி கண்டு உலகம் வியப்படைந்தது. இந்தியா தடுமாறியது. உலக வல்லரசுகள் விடுதலைப் புலிகளின் அபரீதமான வளர்ச்சி கண்டு திகைப்படைந்தன. ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பானது முப்படைகளையும் கொண்டு மரபு வழி இராணுவமாக வளர்ச்சியடைந்ததை உலக வல்லரசுகளால் ஜீரணிக்க முடியவில்லை. உலக வல்லரசுகளின் புலனாய்வுகள் களமிறக்கப்பட்டன. தமிழர்களின் போராட்டம் ஒரு தீர்க்கமான நிலைக்குச் சென்றபொழுது அமைதிப் பேச்சுவார்த்தை என்று நோர்வே, ஜப்பான் மூலமாக அமெரிக்க - இந்திய வல்லாதிக்கங்கள் தமிழர்களின் ஈழக்கொள்கைக்கான போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆயத்தமானார்கள்.

இதில் இந்தியா சற்றுத் தள்ளி நின்று அமைதியாகப் பார்த்துக்கொண்டு இருந்தது. விடுதலைப்புலிகளும் அன்று ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வல்லாதிக்க சூழ்ச்சியால் பிரிந்துபோன ஆயுத அமைப்புகளையும் ஆரம்பகால தமிழ்க் கட்சிகளையும் ஒருங்கிணைத்து அரசியல் பலம் பொருந்திய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி, தமது ஆயுதப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க அரசியல் ரீதியாக ஒரு பலம் கொண்ட அமைப்பாக



அதனை உருவாக்கினார்கள். அதில் அவர்கள் பாரிய வெற்றியையும் பெற்றனர். ஆனால் அது சிலகாலம் மட்டுமே நீடித்தது.

உலக வல்லரசுகளின் சூழ்ச்சியில் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற வல்லரசுகள் இலங்கை பேரினவாதத்துடன் இணைந்து பாரியளவில் வியாபித்து இருந்த விடுதலைப்புலிகள் என்ற விருட்சத்தை அமைதிப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் அதன் கிளைகளை வெட்டி இறுதியில் அதனை அடியோடு அழித்துவிட்டனர். ஆம் முள்ளிவாய்க்கால் மண்ணில் பல இலட்சம் மக்களோடும், போராளிகளோடும் போராட்டம் மண்ணோடு மண்ணாகி போனது. ஆனால் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்வாங்கப்பட்ட ஆயுத அமைப்புகள் விடுதலைப்புலிகள் தமது இறுதிவரை எந்தக் கொள்கைக்காக போராடினார்களோ அல்லது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இவ் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் போன்றவர்கள் ஆரம்பத்தில் எந்த கொள்கை அடிப்படையில் போராட தொடங்கி தடம் மாறினாலும் காலவோட்டத்தில் தம் நிலை மாறி ஆரம்ப தளத்துக்கு வந்து விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தையும், அவர்களது ஈழக்கோரிக்கையும் ஏற்றுக்கொண்டு அவர்களை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட இவ் கட்சிகள், புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின் தங்கள் ஈழக்கொள்கையில் இருந்து திரும்பவும் தடம் மாறத் தொடங்கியுள்ளமையானது "பழைய குருடி கதவை திறவடி" என்ற நிலையே தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஈழம் என்று ஆரம்பித்துப் போராடிய இவர்கள் அன்று புலிகளின் ஈழக்கொள்கையை விமர்சித்து அது நடக்காத விடயம். மாநில சுயாட்சி என்றாலும் பரவாயில்லை என்று போராடினார்கள். இறுதியில் அதிலிருந்து விடுபட்டு மாகாண சுயாட்சி என்றாலும் பரவாயில்லை என்று அடிமட்டத்துக்கு இறங்கி வந்தார்கள். மாநில சுயாட்சியை இந்தியா ஏற்றுக்கொள்கின்றது. இலங்கையில் ஈழம் அமைவதை அந்நாடு விரும்பவில்லை. ஆகவே நாங்கள் இந்தியாவின் கோரிக்கையை ஏற்று மாநில சுயாட்சிக்கு உட்படுகின்றோம் என சொன்னார்கள். இறுதியில் அதுவும் இன்றி மாகாண சுயாட்சியை இந்தியா ஏற்படுத்தியது. அதாவது கிடைத்தது என்று சந்தோசப்பட்ட ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், பழம்பெரும் தமிழ் கட்சிகளாகிய தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவர்கள். இன்று மாகாண சபை கலைக்கப்பட்டு மீண்டும் ஒரே நாடு என்ற சித்தாந்த அடிப்படையில் ஆட்சி இடம்பெறுகின்றது.

மேலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 20ஆம் திருத்தச்சட்டம் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தமிழ் ஆயுதக் கட்சிகளின் தலைமைகள் மற்றும் பழம்பெரும் அரசியல் தலைமைகள் இனி என்ன செய்யப்போகின்றார்கள். ஒரு காலத்தில் ஈழக்கொள்கைக்காக போராடியவர்களில் தானும் ஒருவன், இந்த அழிவுகளுக்கு தானும் பொறுப்புக் கூறவேண்டும் என்று கூறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது கொள்கையில் இதுவரை தடம் மாறாமல் பயணிப்பதாகக் கூறிவரும் அவர், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையும், தனது தாரக மந்திரமும் இப்பொழுது வடகிழக்கில் நடக்கின்றதா?. மக்கள் சுதந்திரமாக செயற்பட தாயகத்தில் சுயாட்சி இடம்பெறுகின்றதா, சுதந்திரமாக கருத்துக்களைப் பகிர சுயாட்சி அனுமதிக்கின்றதா, சாதாரண எமது இந்துக்களின் கார்த்திகை தீப நிகழ்வுகளைக் கூட இராணுவ அடக்குமுறைக்குள் கொண்டாடுகின்றோம். அதனை சுதந்திரமாக அனுஷ்டிக்க அனுமதி இல்லை. மக்களை அவர்களின் அனுஷ்டானங்களை அமைதியாக செய்ய அனுமதியுங்கள் என அமைச்சரான டக்ளஸ் தேவானந்த அவர்கள் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கூற வேண்டியுள்ளது. இதைத் தான் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதா?இது ஒரு புறமிருக்க கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் நல்லாட்சி என்றும் அதற்கு உறுதுணையாக நின்று, தமிழ் மக்களுக்கு எதைச் சாதித்தீர்கள்.

பிரச்சினைக்கு விடிவு புதுவருடத்தில் வரும் தீபாவளிக்கு வரும் என்று வெறும் அறிக்கை மட்டும் விடுவதும் அவ்வாட்சி காலங்களில் கிடைத்த மாகாண சபைகளைக் கூட சரியான முறையில் செயற்படுத்தாமல் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளையும் செய்யாமல், நீங்கள் ஊழல் செய்து, உங்களுக்குள் முட்டி மோதி எதை சாதித்துள்ளீர்கள். ஆயுதப் போராட்டத்தில் தான் உங்களால் ஒன்றிணைய முடியவில்லை. இப்பொழுதாவது அரசியல் பேதங்களை மறந்து, அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை மறந்து, துன்பத்தால் துவண்டு இனி என்ன நடக்குமோ என அச்சத்துடன் வாழும் அப்பாவித் தமிழ் இனத்துக்காக ஏதாவது செய்ய முயலுங்கள். ஈழக்கோரிக்கையைக் கைவிட்டுவிட்டீர்கள், சுயாட்சிக் கொள்கை இல்லாமல் போய்விட்டது. மாகாண சபையும் மறைந்து போய்விட்டது. இனி எதனைக் கேட்பதாக உத்தேசம். முடிவெடுக்க இனிக் காலமில்லை. இராணுவ அச்சுறுத்தலாலும், ஒடுக்கு முறையாலும் தவிக்கும் தமிழ் மக்கள் ஓர் விமோசனத்தைப் பெற அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணையுங்கள். இதனையும் தவற விட்டால் வரலாறு மட்டுமல்ல வரும் சந்ததியினரும் உங்களை மன்னிக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

தமிழ் கிறுக்கன்

# விளையாட்டு செய்திகள்

## ஆர்ஜென்டினாவில் 3 நாட்கள் துக்க தினம் அனுஷ்டிப்பு

காற்பந்து ஜாம்பவான் மரடோனா மறைவையொட்டி ஆர்ஜென்டினாவில் 3 நாட்கள் தேசிய துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

ஆர்ஜென்டினா காற்பந்து அணியின் முன்னாள் தலைவரும் ஜாம்பவானுமான மரடோனா 1977 முதல் 1994-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சர்வதேச காற்பந்து அரங்கில் தன்னை நிலை நிறுத்தியவர்.

தனது வேகம் மற்றும் விவேகம் நிறைந்த நளினமான ஆட்டத்தால் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்ட காற்பந்து கதாநாயகனாக ஜொலித்தார்.

1986ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்டினா அணியின் தலைவராக இருந்த மரடோனா உலக காற்பந்து அரங்கில் பிரேஸில் ஜாம்பவான் பீலேவுக்கு நிகராக பார்க்கப்பட்டவர்.

4 உலகக் கிண்ணப் போட்டிகளில் (1982. 1986. 1990. 1994) பங்கேற்றவரான அவர் ஆர்ஜென்டினா அணிக்காக 91 சர்வதேச போட்டிகளில் விளையாடி 34 கோல்கள் அடித்துள்ளார்.

பார்சிலோனா. நபோலி. செவில்லா உள்ளிட்ட கிளப் அணிகளுக்காக களம் கண்டிருக்கும் அவர் மொத்தம் 491 கிளப் போட்டிகளில் விளையாடி 259 கோல்கள் அடித்திருக்கிறார்.

10ஆம் நம்பர் சீருடைக்கு தனி மரியாதை சேர்த்த அவர் ஓய்வுக்குப் பிறகு ஆர்ஜென்டினா உட்பட பல்வேறு அணிகளின் பயிற்சியாளராக பணியாற்றினார்.

அத்துடன் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி உடல் நலம் பாதிக்கப்பட்டு அதற்காக சிகிச்சையும் பெற்றார். இந் நிலையில் 60 வயதான மரடோனா கடந்த 2ஆம் திகதி உடல் நலக் குறைவு காரணமாக பியூனஸ் அயர்சில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டிருப்பது தெரியவந்ததை அடுத்து அவசரமாக சிகிச்சை செய்யப்பட்டு இரத்த உறைவு அகற்றப்பட்டது. ஒரு வாரம் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்ற அவர் வீடு திரும்பினார்.

இந் நிலையில் மரடோனாவுக்கு 2020.11.25 திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது. அவரது திடீர் மறைவு காற்பந்து ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தி இருக்கிறது. அவரது மறைவையொட்டி ஆர்ஜென்டினாவில் 3 நாட்கள் தேசிய துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்கள் உட்பட பலரும் மரடோனா மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர்.





## பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைச் சேர்ந்த 6 பேருக்கு கொரோனா!



நியூசிலாந்துக்குச் சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினருக்கு நடத்தப்பட்ட கொரோனாத் தொற்றுப் பரிசோதனையில் 6 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. மூன்று 20 ஓவர் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினர் நியூசிலாந்துக்கு சென்றுள்ளனர். புறப்படுவதற்கு முன்பாக பாகிஸ்தானில் நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் எந்த வீரருக்கும் பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில் நியூசிலாந்துக்கு சென்றதும் நடத்தப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தனியாக வேறு இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதில் வீரர்கள் எத்தனை பேர். பயிற்சி உதவியாளர் எத்தனை பேர் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

## 22 முறை கொரோனா பரிசோதனை செய்துள்ளேன்

“கடந்த 4அரை மாதத்தில் நான் 22 முறை கொரோனாத் தொற்றுப் பரிசோதனை செய்துள்ளேன். இதில் ஒரு முறைகூட எனக்கு பாதிப்பு இருப்பதற்கான முடிவு வரவில்லை” என இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தலுக்கு இடையே 13ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) இதை நடத்தி முடித்தது. இத் தொடரை வெற்றிகரமாக நடத்தி முடித்ததில் பி.சி.சி.ஐ. தலைவர் கங்குலியின் பணி அளப்பரியது.

இந் நிலையில் ஜூம் செயலி வழியாக கங்குலி ஊடகமொன்றிற்கு செவ்வியளித்த கங்குலி “கடந்த 4அரை மாதத்தில் நான் 22 முறை கொரோனா பரிசோதனை செய்துள்ளேன். இதில் ஒரு முறைகூட எனக்கு பாதிப்பு இருப்பதற்கான முடிவு வரவில்லை. என்னை சுற்றி வைரஸ் பாதிக்கப்பட்டவர்கள் இருந்ததால் தான் நான் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் ஐ.பி.எல். போட்டி தொடரை வெற்றிகரமாக பி.சி.சி.ஐ. குழு நடத்தியது பெருமையாக உள்ளது. 14-வது ஐ.பி.எல். போட்டி இந்தியாவில் நிச்சயமாக நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளது. எனத் தெரிவித்திருந்தார்.






## ஆடம்பரமான முறையில் கொரோனாவை எதிர்கொள்ளும் ஜப்பானியர்கள்..!

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் வைரம், முத்து, பவளம் பதித்த விலை உயர்ந்த முகக்கவசங்களை அணிந்து மக்கள் கொரோனாவை ஆடம்பரமாக எதிர்கொள்வதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக 0. 7 கரட் வைரம் அடங்கிய முகக்கவசத்தை ஒருவர் தயாரித்துள்ளார். இதில் 300 துண்டுகள் படிகங்களும் 330 ஜப்பானிய அகோயா முத்துகளும் பதிக்கப்பட்டுள்ளன. இதன் விலை 9,640 டொலராகும்.





## டுபாயில் பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொண்டு உயிரிழந்த நூற்றுக்கணக்கான ஒட்டகங்களின் எலும்பு கூடுகள் கண்டுபிடிப்பு !

டுபாய் பாலைவன பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொண்டு உயிழந்த நூற்றுக்கணக்கான ஒட்டகங்களின் எலும்பு கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. டுபாயில் ஒட்டகங்களின் நலனை பராமரிக்க மத்திய கால்நடை ஆராய்ச்சி ஆய்கவத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சமீபத்தில் பாலைவன பகுதிகளில் மேய்ச்சலுக்காக செல்லும் ஒட்டகங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. பாலைவன பகுதிகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் அங்கு உயிரிழந்த ஒட்டகங்களின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு குறித்த எலும்புக்கூடுகளின் அருகே மூட்டையாக பிளாஸ்டிக் குவியல்கள் இருந்தன. அதனை ஆய்வு செய்து பார்த்தபோது அவை அனைத்தும் அந்த ஒட்டகங்கள் சாப்பிட்டுள்ளது தெரியவந்துள்ளது. வயிற்றில் இருந்த பிளாஸ்டிக் கழிவுகள் உக்கலடையாமல் வெகு நாட்களாக பாலைவன பகுதியில் கிடந்துள்ளது.

இது குறித்து துபாய் மத்திய கால்நடை ஆய்வகத்தின் அறிவியல் இயக்குனர் டாக்டர் உல்ரிச் வார்னெரி கூறியதாவது:- வயிற்றை நிரப்ப பிளாஸ்டிக்குகளை உணவாக அந்த ஒட்டகங்கள் உட்கொண்டுள்ளன. இது உண்மையில் வேதனையளிப்பதாக உள்ளது. இதன் மூலம் ஜீரணமாகாமல் கடுமையான வயிற்றுவலி ஏற்படும். பட்டினி காரணமாகவும், ஊட்டச்சத்து குறைபாடு காரணமாகவும் ஒட்டகங்கள் பிளாஸ்டிக் கழிவுகளை உணவாக உட்கொள்கின்றது.

தற்போது இதுபோன்ற ஒட்டகங்கள் அடையாளம் காணப்பட்டு கால்நடை ஆராய்ச்சி மையத்தில் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது. பாலைவன பகுதிகளில் சுற்றுலாவுக்கு வருபவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை வீசி செல்வதால் அவைகளை ஒட்டகங்கள் சாப்பிட நேரிடுகிறது. எனவே பொதுமக்களுக்கும் ஒட்டகங்கள் மற்றும் கால்நடைகளை பாதுகாக்கும் விதமாக சுகாதாரமாக கழிவுகளை அகற்ற வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதுவரை பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொண்டு சுமார் 300 ஒட்டகங்கள் பாலைவன பகுதியில் பலியாகி உள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த ஒட்டகங்களின் வயிற்றில் சுமார் 53 கிலோ எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் இருந்துள்ளது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





## பாகிஸ்தானில் பாலியல் துஷ்பிரயோக குற்றவாளிகளுக்கு தூக்கு – அமைச்சரவை ஒப்புதல்

பாகிஸ்தானில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுக்கும் வகையில். அந்தக் குற்றங்களில் ஈடுபடுவோரை தூக்கிலிட வகை செய்யும் அவசரச் சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்குவோரைத் தூக்கிலிடுவது, அவர்களுக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்வது ஆகிய தண்டனைகளுக்கு வழி வகுக்கும் இரண்டு அவசர சட்டத்துக்கு பாகிஸ்தான் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் 'பாலியல் பலாத்காரம்' என்பதற்கான வரையறையையும் மாற்ற அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுவீடனின் இளவரசர் மற்றும் இளவரசிக்கு கொரோனா!

சுவீடன் இளவரசர் கார்ல் பிலிப் (Carl Philip) மற்றும் இளவரசி சோபியாவுக்கு (Sofia) கொரோனாத் தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் இளவரசர் மற்றும் இளவரசி ஆகியோருக்கு லேசான அறிகுறிகள் மட்டுமே உள்ளன என்றும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மன்னர், ராணி மற்றும் பட்டத்து இளவரசி விக்டோரியா உட்பட அரச குடும்பத்தினர் அனைவரும் கொரோனா சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்தநாளை கொண்டாடிய தமிழக அரசியல் தலைவர்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 66-வது பிறந்த நாளை தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி வேல்முருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் கேக் வெட்டி கொண்டாடினர். தமிழகத்திலும் பல்வேறு கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள் பிரபாகரனின் பிறந்த நாளை நிவர் புயலுக்கு நடுவே கொண்டாடின. தருமபுரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் த.வா.க. தலைவர் வேல்முருகன் கட்சியினருடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

சென்னையில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், பிரபாகரன் பிறந்த நாளை முன்னிட்டு கட்சி நிர்வாகிகளுடன் கேக் வெட்டினார் அதே போல் நாம் தமிழர் கட்சியின் சார்பாக பிரபாகரன் பிறந்த நாள் பொதுக்கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் பிரமாண்ட கேக் வெட்டப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டு பிரபாகரன் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. சமூக வலைதளங்களிலும் #HBD மேதகு PRABHAKARAN #HBD தேசியத்தலைவர்66 ஆகிய ஹேஷ்டேக்குகள் டிரெண்டிங்காகின.





# தடைகளை தாண்டி இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல்











# புலம்பெயர் தேசத்தில் மாவீரர் நினைவேந்தல்











இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 29.11.2020 அன்று வெளியிடப்பட்டது.